விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Valampurii

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 11 சனிக்கிழமை (27.07.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 220

இலங்கையில் அவசரகாலச் சட்டத்தினூடாக மக்களுக்கு அழுத்தங்கள் அதிகரிப்பு

ஐ.நாவின் விசேட பிரதிநிதி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப் பட்ட குண்டுத் தாக்குதல்கள் மற் றும் கடந்த ஒக்ரோபர் மாதம் இடம் பெற்ற அரசியல் மாற்றம் என்பவற் றோடு, அவசரகால சட்டம் நீடிக்கப் பட்டுள்ளமையும் தற்போது மக் களுக்கான அழுத்தத்தை அதிகரிக் கச் செய்துள்ளதாக ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் கிளை மென்ட் நைலட்சோலி வூல் தெரி வித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்ற விசேட ஊட க சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது தொடர்ந் தும் கருத்து வெளியிட்ட 23

மின்னல் தாக்கி 3 வாகனங்கள் முற்றாக தீயில் எரிந்து நாசம்

ஆனைக்கோட்டை பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள வீடொன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டொல் பின் வான் மற்றும் பாரவூர்தி 23

ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதியுடன் சந்தித்து பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கும் ஜப் பானிய பாதுகாப்பு இராஜாங் க அமைச்சர் கெஞ்ஜி ஹராடா வுக்கும் 23

தெரிவுக்குழுவில் சாட்சியமளிக்காது வெளியேறினார் சட்டமா அதிபர்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற் கான பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சி வழங்குவ தற்காக சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா நேற்று ஆஜராகியிருந் தார்.

இதன்போது அவர், வழக்கு விசாரணைகள் இடம் பெறும் நேரத்தில் தான் சாட்சியமளித்தால் அது தனது கடமை சார்ந்த முரண் பாட்டை தோற்றுவிக்கும் என தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை என அனைவரை யும் தான் பிரதிநிதித்துவ படுத்துவதாகவும் சாட்சி 23

பல்கலை. அனுமதிக்கான வெட்டுப்புள்ளி வெளியானது

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு மாண வர்களை இணைத்துக் கொள்வ தற்கான வெட்டுப்புள்ளி வெளியிடப் பட்டுள்ளது.

2018-2019 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை 23

தற்போதைய அரசுக்கு ஆதரவு வழங்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களை ஏமாற்றிவிட்டது

மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களை மிகவும் கடுமையாக ஏமாற்றி வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்றைய தினம் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

நான் 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று செயற்பட நினைத்ததாக பலர் குறிப் பிடுகின்றனர். நான் அதனை இன்றும் ஏற்றுக் கொள்கின்றேன்.

நான் இதனூடாக பாராளுமன்றில் இரண் டாவது சபை ஒன்றை ஏற்படுத்தி பிரதேச சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை 23

வலிகாம வலயப் பாடசாலைகளுக்கு வரும் செவ்வாய் சிறப்பு விடுமுறை

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழா நாளான வரும் 30ஆம் திகதி செவ்வாய்க் 23

சஹ்ரானுடன் தொடர்பு கொழும்பில் இளைஞன் கைது

(கொழும்பு)

தேசிய தௌஹித் ஜமாத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் ஹாசிமுடன் தொடர்புகளை கொண் டிருந்த இளைஞன் ஒருவரை கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர் கைது செய் 23

மகிந்தவுடன் பத்து கட்சிகள் கூட்டு சேர்ந்தது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வுடன் ஒன்றிணைந்து செயற்படு வதற்கு 10 அரசியல் கட்சிகள் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைசாத் 03

திட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாண சபையை இல்லாதொழித்தது த.தே.கூட்டமைப்பே

மகிந்த ராஜபக்ஷ சாடல்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினைக் குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபையை இறுதியில் இல்லாதொழித்திருப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. இதற்கு சுமந்திரன் பொறுப்புக்கூற வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள் ளார். பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

நான் 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று செயற்பட நினைத் ததாக பலர் குறிப்பிடுகின் றனர். நான் அதனை 23

அடுத்த ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பார்

மங்கள சமரவீர ஆரூடம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி, நிச்சயமாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லா தொழிப்பதற்கான நட வடிக்கையை மேற்கொள் 23

யாழில் மகாபோதி அமைப்பதை எதிர்த்து நீதிமன்றம் செல்ல முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் வடக்கு தையி ட்டி பகுதியில் தனியார் காணியில் மகாபோதி அமைக்கப்படுவதை எதிர்த்து நீதிமன்றம் செல்லவுள்ள தாக வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் 23

மணமகள் தேவை

85, பூரம், 10 சூரியன் செவ்வாய் 28 பாவம் 5′ 3″ உயரம் MBBS டொக்டர் மணமகனிற்கு மண மகள் தேவை.

(9656)

துர்க்கா திருமண சேவை
077 818 5978 / 075 011 1122

5 ஜி கோபுரத்தால் யாழிலிருந்து குடும்பமொன்று இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநரசபையில் முறைப்படியான அனுமதி பெறப்படாமல், முதல்வரினால் அனுமதிக்கப்பட்ட ஸ்மார்ட் போல் திட்டத்தால் யாழ்நகரிலிருந்து குடும்பமொன்று இடம் பெயர்ந்துள்ளது.

யாழ் இந்து ஆரம்பப்பாடசாலைக்கு அருகில் அமைக்கப்பட்ட ஸ்மார்ட்போல்கோபுரம், சாதாரண மழைக்கே சரிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளதையடுத்து, கம்பத்திற்கு அருகிலுள்ள வீட்டிலிருந்தவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

கம்பம் சரிவது தொடர்பில் யாழ் மாநகரசபைக்கு அறிவித்தும் அவர்கள் பாராமுகமாக இருந்ததாகவும், வேறு வழியின்றி உயிரை பாதுகாத்துக் கொள்ள பெறுமதியான பொருட்களுடன் வீட்டை விட்டு வெளியேறியதாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

5ஜி திட்டத்திற்காக இந்த கோபுரம் நடப்படுவதாக தெரிவித்து, இந்த பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

வீடு வாடகைக்கு

பலாலி வீதி கந்தர்மடச் சந்திக்கு அருகாமையில் கல்வி / ICT நிலையமாகவோ / பத்திரிகை அலுவலகமாகவோ / அரச தனியார் சேவை நிறுவனமாகவோ பயன்படுத்தக் கூடிய பெரிய வீடு வாடகைக்குண்டு.

(9693)

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு :
077 730 2154 / 011 273 4403

முதலாம் ஆண்டு நினைவலைகள்

அம்மா !
நீ சென்று இன்றுடன்
வருடம் ஒன்று ஆனது
ஆயிரம் இருந்து என்ன
உன்னிழப்பு எம்மை
நிலைகுலைய வைத்தது
உன் துணைக்கென்றே
அப்பாவையும் அவசரமாய்
அழைத்தனை போலும்
ஒளியிழந்த எங்கள்
குடும்பத்திற்கு ஒளிதந்திட
நீ மீண்டும் வரவேண்டுமம்மா

தோற்றம் 03.07.1944
மறைவு 27.07.2018

திருமதி
சதானந்தன் வள்ளிநாயகி
(இராசகுமாரி)

ஆனந்தபவன், அல்வாய்.
உன்பிரிவால் துயருறும் பிள்ளைகள்.

(C-7115)

ஆறாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
21-05-1948

விண்ணில்
01-08-2013

ஆனந்தன் செல்வநாதன்
(உரிமையாளர், அரியாலை மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம்)

தலைமகனாய் தலைவனாய் தரணிபோற்றும் தந்தையாய்
நிலந்தனிலே என்றும் நிறைவோடு வாழ்ந்தவரே
நிலையாக நினைவுகளில் வாழுகின்ற நிலைதந்து
நிறைந்ததுவோ ஆறாண்டுகள் நித்தமும் மறவோமே!
நன்றாய் வளர்த்து நல்வழிகள் காட்டியெமை
என்றும் சிறப்புடனே வாழவைத்த அப்பாவே!
சென்றிடினும் வாழ்நாளில் எம்சிந்தையிலே வாழ்வீர்
என்றினி உங்கள் எழில்வதனங் காண்போம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-7119)

22, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

கேள்வி அறிவித்தல்

குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) – 2019
முத்திரைத் தீர்வை வேலைத்திட்டம்
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம், உள்ளூராட்சி மன்றங்கள் சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி வேலைகளுக்காக கோருகின்றார்.

2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 08.05.2019 ஆந் திகதிய 04/2016 (ii) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் படி வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்வி தாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்தில் கொள்ளப்படலாம்.

3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில்நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

4. தேவையானதகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் (தொலைபேசி : **021 222 2654**, தொலைநகல் **021 222 3410** மின்னஞ்சல் : raclgjaffna@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணி வரை 13.08.2019 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் இடத்திலிருந்து **29.07.2019** திகதியிலிருந்து **13.08.2019ம்** திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **2000 /= (வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன்பண்ணை வீதி,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 13.08.2019ம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு - 29.10.2019) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

9. கேள்விகள் தொடர்பாக இறுதித்தீர்மானம் பெறுகைக்குழுவினால் எடுக்கப்படும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

கேள்வி எண்	வேலை விபரம்	மதிப்பீடு தொகை (மில்லியன்)	ஒப்பந்த காலம்	வேண்டப்படும் தரம்	கேள்விப் பிணை	
					பிணை வைப்பு	செல்லுபடியாகும் காலம்
NP/14/41(1)/ PL2/PSDG/SD CHPS/01/2019	மெய்கண்டான் வீதி புனரமைப்பு மட்டுவில்	7.32	03 மாதங்கள்	C7 and C6 (வீதி)	73,500.00	26.11.2019
NP/14/41(1)/ PL2/PSDG/ CHPS/02/2019	வாகையடி வீதி புனரமைப்பு கச்சாய்	8.60	03 மாதங்கள்	C7 and C6 (வீதி)	86,500.00	26.11.2019
NP/14/41(1)/ PL2/PSDG/SD/ NPS/01/2019	பும்புகார் வீதி புனரமைப்பு அரியாலை	8.25	03 மாதங்கள்	C7 and C6 (வீதி)	82,500.00	26.11.2019

11) கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் **05.08.2019** அன்று மாலை 14.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ள முடியும்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்.
யாழ்ப்பாணம்
27.07.2019

(C-7118)

பிரபாகரன் காலத்தில் நாட்டு மக்கள் அச்சப்படவில்லை

மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

மத அனுட்டானங்களில் ஈடுபடவும் முக்கிய பண்டிகைகளைக் கொண்டாடவும் முடியாத அச்ச நிலைக்கு நாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, இவ்வாறான நிலை பிரகாகரனின் காலத்தில் கூட இருந்ததில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் கீழ் புதிய அரசியல் கட்சிகள் இணைந்து அமைக்கும் கூட்டணிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற குறித்த கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். "அரசியல் தலைவர்களின் அதிகார போட்டித்தன்மையினால் தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டது. இதன் தாக்கத்தை நாட்டு மக்களே இன்று எதிர்கொண்டுள்ளார்கள்.

மத அனுட்டானங்களில் ஈடுபடவும் முக்கிய பண்டிகைகளை கொண்டாடவும் முடியாத அச்ச நிலை தற்போது காணப்படுகின்றது. பிரபாகரனின் காலத்தில் கூட நாட்டு மக்கள் இவ்வாறான நிலைமைக்கு தள்ளப்படவில்லை" என மேலும் தெரிவித்தார். (7-9)

பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கமுடியும் என்றால் ஏன் கோத்தாவிற்கு வழங்க முடியாது?

த.தே.கூட்டமைப்பிடம் கருணா கேள்வி



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஏன் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்க முடியாதென கருணா அம்மான் கேள்வியெழுப்பியுள்ளார்.

இராணுவத் தளபதி பதவி வகித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் ஆதரவு வழங்க முடியுமாக இருந்தால் ஏன் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்க முடியாது.

எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் தமிழ் மக்கள் எத் தலைமைகளின் தீர்மானத்திற்கும் அமைய அரசியல் ரீதியான தீர்மானங்களை முன்னெடுக்காமல் தனித்து யதார்த்த நிலையினை உணர்ந்து தீர்மானங்களை மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது எனவும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7-9)

மகிந்தவுடன் 10 கட்சிகள் கூட்டு

(கொழும்பு)

உத்தேச ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்தி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு 10 அரசியல் கட்சிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு உத்தியோகபூர்வமாக இணைந்துக் கொண்டன.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்பட்ட அரசியல் கட்சிகளும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத அரசியல் கட்சிகளுமே இவ்வாறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் ஊடாக உத்தியோகபூர்வமாக பொதுஜன பெரமுனவிற்குள்இணைந்து கொண்டார்கள்.

அந்தவகையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை பிரிதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகளும் தெற்கினை பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள கட்சிகளும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

மௌபிம ஜனதா கட்சி, இலங்கை தொழிலாளர் ஜக்கிய முன்னணி, தமிழ் ஜக்கிய சுதந்திர முன்னணி, ஈழவர் ஜனநாயக முன்னணி, முஸ்லிம் உலமா கட்சி, லிபரல் கட்சி, நவ சிஹல உறுமய, ஜனநாயக தேசிய ஒன்றியம், ஜக்கிய லங்கா மகா கட்சி, பூமி புத்ரா கட்சி உள்ளிட்ட கட்சிகளே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்தினால் இந்த ஒப்பந்தம் இரு தரப்பு கைச்சாத்திடலுக்கு உட்பட்டது. இதற்கமைய ஒவ்வொரு கட்சிகளின் உள்ளக தனித்துவ கொள்கைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வாக்குறுதி வழங்கியது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்த கைச்சாத்திடல் நிகழ்வில் பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ஷ, டலஸ் அழகப்பெரும, பவித்ரா வன்னியாராச்சி, கெஹலிய ரம்புக்வெல, லக்ஷமன் யாப்பா அபேவர்தன, சி.பி ரத்நாயக்க உட்பட பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட 10 கட்சிகளின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (7-9)

தொடர்ந்தும் ஏமாற்றப்படும் தமிழ் மக்கள்

வியாழேந்திரன் ஆதங்கம்

(கொழும்பு)

சிறுபான்மை மக்களுக்கான மிகவும் முக்கியமான விவாதம் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போது ஆளும் கட்சி சார்பில், சபையில் ஒருவரும் இல்லாமை ஏமாற்றம் அளிப்பதாக தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன், நல்லாட்சி அரசுக்கு ஆதரவளித்து ஏமாற்றப்பட்ட தரப்பாக தமிழர் தரப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை புதிய அரசியலமைப்பு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றுகையில், 'ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் தேசிய அரசாங்கத்தினை அமைத்திருந்த இரண்டு பிரதான கட்சியினரும் அக்கறை காட்டியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் காட்டவில்லை.

தொடர்ந்தும் ஏமாற்றப்பட்ட மக்களாக இன்று தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். அரசாங்கம் தன்னை பாதுகாத்து கொள்வதற்காகவும் தனது தேவைக்காகவும் மாத்திரமே கூட்டமைப்பினை பயன்படுத்துகின்றது' என மேலும் தெரிவித்தார். (7-9)

அதிகாரப்பகிர்வை வழங்க மறுக்க அரசாங்கத்துக்கு அதிகாரமில்லை

ஜயம்பதி விக்ரமரட்ன

(கொழும்பு)

ஜக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வை வழங்க முடியாது எனக்கூற அரசாங்கத்துக்கு அதிகாரமில்லை என ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரட்ன தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாம் பாரிய எதிர்பார்ப்புக்களுடன்தான் 2015 ஆம் ஆண்டு, மாற்றத்தை எதிர்பார்த்து மக்களுக்காக ஒன்றிணைந்து இந்த ஆட்சியை எஸ்தாபித்தோம்.

ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன களமிறங்கியபோது, 100 நாட்கள் அரசாங்கத்துக்குள் செய்ய வேண்டிய விடயங்களை நாம் தேர்தல் விஞ்ஞாபனமாக வெளியிட்டோம். அதற்கிணங்க, 19 ஆவது திருத்தச்சட்டத்தை நாம் கொண்டுவந்தோம். இதனை நாம் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலேயே கொண்டு வந்தோம். சிலர் இதிலுள்ள சில விடயங்களுக்கு எதிர்ப்பினை அன்று வெளியிட்டார்கள்.

ஜனாதிபதியின் அதிகாரத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவதற்காகவே. இதனை கொண்டு வருவதாக சிலர் விமர்சித்தார்கள்.

எனினும், ஒரு தனி நபரின் அதிகாரத்தை இன்னொரு நபரிடம் வழங்கும் வகையில் நாம் செயற்படவில்லை. இந்த நாடாளுமன்றத்தை பலப்படுத்தும் நோக்கிலேயே நாம் 19 ஆவது திருத்தச்சட்டத்தைக் கொண்டுவந்தோம். ஆனால், தற்போது இதனால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அதிகாரப் போட்டியேற்பட்டுள்ளது. இதனையிட்டு நாம் கவலையடைகிறோம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பதாகக் கூறினார். இதனைத்தான் நாம் செய்தோம்.

தற்போது, 19 ஆவது திருத்தச் சட்டத்தை பிழை என்று கூறி வருகிறார். எனினும், இந்த நாட்டின் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு எதிர்ப்பினை வெளியிட இங்கு யாருக்கும் அதிகாரமில்லை. ஒன்றிணைந்த நாட்டுக்குள் அதியுயர் அதிகாரப்பகிர்வை வழங்குவோம் என்று கூறியே, 2015 ஆம் ஆண்டில் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. எனவே, அதிகாரப்பகிர்வுக்கு எதிர்ப்பினை வெளியிட இவர்களுக்கு எந்தவொரு அதிகாரமும் கிடையாது" என மேலும் தெரிவித்தார். (7-9)

இரு அமைச்சுப்பொறுப்புக்களில் மாற்றம்

(கொழும்பு)

அமைச்சர் பீ.ஹரிசன் மற்றும் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரின் அமைச்சுப் பொறுப்புக்களில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கமைய, அமைச்சர் மத்தும பண்டாரவின் அமைச்சில் காணப்பட்ட கிராமிய வர்த்தக நடவடிக்கைகள் பிரிவு அமைச்சர் பீ.ஹரிசனின் அமைச்சின் கீழ் இயங்கும் வகையிலும், அமைச்சர் பீ.ஹரிசனின் அமைச்சில் காணப்பட்ட கால்நடை அபிவிருத்தி பிரிவு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் அமைச்சின் கீழ் இயங்கும் வகையில் மாற்றப்பட்டுள்ளது.

இருவருக்குமான நியமனக் கடிதங்களை நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கி வைத்தார். (7-9)

முத்தான வெற்றியுடன் விடைபெற்றார் மலிங்க

பங்களாதேஷை வீழ்த்தியது இலங்கை

பங்களாதேஷின் தமிம் இக்பாலை போல்டாக்கிய மகிழ்ச்சியில் மலிங்க

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. யோர்க்கர் மன்னன் மலிங்க வெற்றி யுடன் விடை பெற்றார்.

இலங்கை வந்துள்ள பங்களா தேஷ் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி நேற்று கொழும் பில் நடந்தது. 'நாணயச்சுழற்சியில்' வென்ற இலங்கை அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. இலங்கை வேகப்பந்துவீச்சாளர் மலிங்க தனது கடைசி ஒரு நாள் போட்டியில் களமிறங்கினார். பங்களாதேஷ் அணிக்கு வேகப்பந்து வீச்சாளர்கள் தொல்லை கொடுத்தனர். அவிஷ்கா (7) ஏமாற்றினார். அணித் தலைவர் கருணாரத்ன 36 ஓட்டங்களில் ஆட்ட மிழந்தார். பின், இணைந்த குசல் பெரேரா, குசல் மெண்டிஸ் ஜோடி சிறப்பாக விளை யாடியது. குசல் பெரேரா ஒரு நாள் அரங்கில் 5வது சதம் எட்டினார். மூன்றாவது விக்கெட்டுக்காக 100 ஓட்டங்கள் சேர்த்த போது, பெரேரா (111) ஆட்டமிழந்தார். ரூபைல் பந்தில் மெண்டிஸ் (43) சிக்கினார். மத்யூஸ் (48) அரைச்சத வாய்ப்பை இழந்தார்.

50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 314 ஓட்டங்கள் எடுத்தது. மலிங்க (6), பிரதீப் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மலிங்க அசத்தல்

மலிங்கவின் முதல் ஓவரில் அணித் தலை வர் தமிம் இக்பால் டக் அவுட்டானார். மிதுன் (15), முஷ்பிகுர் (60), 10 ஓட்டங்களில் திரும்பினார். மீண்டும் வந்த மலிங்க இம்முறை சவுமியா சர்காரை வெளியேற்றினார். குர். சபிர் ஜோடி பொறுப் புடன் விளையாடியது. சபிர் முஷ்பிகுர் (67) அரைச் சதம் கடந்தனர். பிரதீப் 'வேகத்தில்' சபியுல் (2) ஆட்டமிழந்தார். மலிங்க தனது கடைசி ஓவரின் 4வது பந்தில் முஸ்தபிஜுர் (18) வெளியேற்றி வெற்றி தேடிக் கொடுத் தார்.

பங்களாதேஷ் 41.4 ஓவரில் 223 ஓட்டங் களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து வீழ்ந்தது.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக மலிங்க, பிரதீப் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

வோக்ஸ் 'ஆறு' இங்கிலாந்து 'ஜோரு'

38 ஓட்டங்களுடன் சுருண்டது அயர்லாந்து

அயர்லாந்துக்கு எதிரான லோர்ட்ஸ் டெஸ்டில், வோக்ஸ் ஆறு விக்கெட் வீழ்த்த இங்கிலாந்து அணி 143 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து, அயர்லாந்து அணிகள் மோதிய டெஸ்ட் போட்டி (நான்கு நாள்) லண்டன் லோர்ட்சில் நடந்தது. முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 85, அயர்லாந்து 207 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாம் நாள் முடிவில், இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 9 விக்கெட்டுக்களை இழந்து 303 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பிரோட் (21), ஸ்டோன் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றம்

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் நடந்தது. ஸ்டோன் டக் அவுட்டாக, இங்கிலாந்து இரண்டாவது இன்னிங்சில் 303 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

182 ஓட்டங்கள் என்ற இலக்குடன் அயர்லாந்து இரண்டா வது இன்னிங்சை ஆரம்பித்தது. எதிரணி 'வேகங்கள்' போட்டுத் தாக்கினர். வோக்ஸ் பந்துவீச்சில் அணித் தலைவர் போர்டர்பீல்ட் (2), ஜேம்ஸ் மக்கலம் (11) ஆட்டமிழந்தனர். பிரோட் 'வேகத்தில்' போல்பிரின் (5), கெவின் ஓ பிரையன் (4) சிக்கினர். இப்படி அடுத்தடுத்து துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்ற, அயர்லாந்து அணி 25 ஓட்டங்களுக்கு 6 விக்கெட் டுக்களை தாரைவார்த்தது. தோம்ப்சனை (4) வெளியேற்றிய வோக்ஸ், ஐந்தாவது விக்கெட்டை கைப்பற்றினார். இதன்பின், அவ் அணியால் மீளவே முடியவில்லை.

இறுதியில் அயர்லாந்து அணி இரண்டாவது இன்னிங் சில் 38 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து வீழ்ந்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் அதிகபட்சமாக வோக்ஸ் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டி மூன்று நாட்களில் நிறைவுக்கு வந்தது.

சொந்த மண்ணில் சாதனை

டெஸ்ட் அரங்கில், சொந்த மண்ணில் நடந்த போட்டிகளில் 183 ஓட்டங்களுக்கு குறைவான இலக்கை நிர்ணயித்து, எதிரணியை சுருட்டிய முதல் அணி என்ற சாதனை படைத்தது இங்கிலாந்து

38

இரண்டாவது இன்னிங்சில் அயர்லாந்து 38 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. டெஸ்ட் அரங்கில் குறைந்த ஓட்டங்கள் எடுக்கப்பட்ட இன்னிங்ஸ் வரிசையில், இது 7ஆவது இடம்பிடித்தது. ஒட்டுமொத்த டெஸ்ட் போட்டிகளில், 64 ஆண்டுக்குப்பின் எடுக்கப்பட்ட குறைந்த ஸ்கோராக அமைந்தது. கடைசியாக, 1955ல் நியூசிலாந்து அணி 26 ஓட்டங்கள் (எதிர் - இங்கிலாந்து) எடுத்திருந்தது.

112 ஆண்டுக்குப்பின்...

டெஸ்ட் அரங்கில் 112 ஆண்டுக்குப்பின் முதல் இன்னிங் சில் (85) குறைந்த எஸ்கோர் எடுத்து, பின் போட்டியில் வென்ற அணி என்ற பெருமை பெற்றது இங்கிலாந்து. இதற்கு முன், 1907ல இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 76 ஓட்டங்களுக்கு (எதிர்-தென்னாபிரிக்கா) சுருண்டு, பின் வெற்றி கண்டது.

94

டெஸ்ட் அரங்கில், குறைந்த பந்துகளில் (94) ஒரு இன்னிங்சில் ஆட்டமிழந்த போட்டிகள் பட்டியலில் இது 2ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டது. ஏற்கெனவே, தென்னாபிரிக்கா (எதிர்- இங்கிலாந்து, 1896), இங்கிலாந்து (எதிர்- ஆஸி., 1902) அணிகள் இப்படி மோசமாக ஆட்டமிழந்து இருந்தன.

6 விக்கெட்டுக்களை வீழ்த்திய இங்கிலாந்தின் வோக்ஸ்

அந்தியேட்டி அழைப்பு

கடந்த 27.06.2019 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர். திருமதி

வசந்தாதேவி கனகசிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 27.07.2019 இன்றுசனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

"வசந்தகம்"
கொற்றாவத்தை

குடும்பத்தினர்

(9695)

Invitation for Bids (IFB)

Yugashakthi (Guaranteed) Ltd.

Construction of Staff Quarters for Theravil Dairy Farm

1.The Chairperson of the Yugashakthi (Guaranteed) Ltd invites sealed Bids from eligible and qualified Bidders for the Construction of Staff quarters for the Diary farm in Theravil.

Contract Title	Non Refundable Bid Fee Per Bidding Document	Duration	Amount of Bid Security
Construction of Staff Quarters at Theravail Dairy Farm	Rs. 3000.00	180 Days	Rs.100,000.00

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
3.To be eligible for contract award, the successful Bidder shall not have been blacklisted and shall meet following requirements.

CIDA Minimum Grade & Field of Specification	Qualification Requirement	Minimum Liquid Asset or Credit Facilities
C7 or above in the Field of Building Construction	❖ Experience in the Construction of at least three contracts of Similar nature and complexity equivalent to the proposed work during last 5 Years ❖ A technical Officer qualified in NCT (Civil) or equivalent with three years relevant experience.	Rs 1.0 Mn

4.Interested Bidders may obtain further information from Yugashakthi (Guarantee) Ltd, OddunarPayitsikallori Road, Muniyappar Kovillady, Theravil,Puthukkudiyiruppu,Mullaitivu. (Tele : +94 (0)21 229 1200) and inspect the Bidding documents at the same address during normal working hours from 29.07.2019 to 09.08.2019 from 09.00 hours to 15.00hours on week days.
5.A complete set of Bidding Documents in English language could be purchased by interested Bidders on submission of a written application addressed to chairperson Yugashakthi(Guarantee) Ltd and could be collected at TheralvilOffice from 29.07.2019 until 09.08.2019 from 0900 hours to 1500hours upon payment of refundable fee. The method of payment shall be cash payment.
6.Bid shall be delivered in duplicate to the address: Chairperson, Yugashakthi (Guarantee ltd),Theravilon or before 2.00 pm on 12.08.2019. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of Bidders representative who choose to attend.
7. Bid shall be accompanied by Bid Security as mentioned issued by a commercial Bank, which shall be valid until 28.10.2019.
8.The pre Bid meeting will be held on 05.08.2019 at 3.00 pm in the Theravil Office. Bidders should arrange their own transportation.

Chairperson,
Yugashakthi (Guarantee Ltd).
OddunarPayitsikallori Road,
Muniyappar Kovillady,
Theravil,
Puthukkudiyiruppu,Mullaitivu.
Tele :+94 (0)21 229 1200

(9705)

கிங்ஸ்டன் மாநகரின் முன்னாள் முதல்வர் யாழ்.மாநகர சபையால் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலண்டன் கிங்ஸ்டன் மாநகரின் முன்னாள் முதல்வரும் உறுப்பினருமான யாழ்.மண்ணைச் சேர்ந்த வைத்தீஸ்வரன் தயாளனுக்கு யாழ்.மாநகரசபையால் வரவேற்புடன் கூடிய கௌரவிப்பு நிகழ்வு நேற்று யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு மாநகரசபையின் கௌரவிப்பை ஏற்றுக்கொண்ட வைத்தீஸ்வரன் தயாளன் விசேட கலந்துரையாடலிலும் கலந்து கொண்டார். இக் கலந்துரையாடலில் யாழ்.மாநகர பிரதி முதல்வர், மாநகரசபை உறுப்பினர்கள், யாழ்.மாநகர ஆணையாளர், மாநகர செயலாளர், பொறியியலாளர்கள், பிரதம கணக்காளர், மாநகரசபை அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் யாழ்.மாநகரசபையில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகள் சார்பில் ஒவ்வொரு கட்சி சார்பிலும் ஒருவர் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இச்சந்திப்பு நிறைவில் யாழ்.மாநகரின் சார்பில் முதல்வரால் நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன் அவர் மாநகரின் குறிப்பேட்டிலும் தனது வருகையை பதிவு செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (5)

அனைத்து வேலைத்திட்டங்களும் அடுத்தமாதம் நிறைவடையும்

நகரசபைத் தவிசாளர் வாமதேவன்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 234.91 மில்லியன் ரூபாய் நிதியில் 195 வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். அவர் மேலும் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

பிரதேசசபையின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி, கம்பெரலிய வேலைத்திட்ட நிதி, கிராமிய அபிவிருத்தி நிதி, சபை நிதி மற்றும் குறித்தொதுக்கப்பட்ட மாகாணசபை நன்கொடை நிதிகள் ஊடாக தற்போது சாவகச்சேரி பிரதேசபையின் மேற்பார்வையின் கீழ் 234.91 மில்லியன் ரூபாய் நிதியில் 195 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சபை நிதி தவிர்ந்த ஏனைய நிதியில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் அனைத்தும் அடுத்த மாத முடிவில் நிறைவுக்கு கொண்டுவர வேண்டும். தற்போது 195 வேலைத்திட்டங்களில் 45 வேலைத்திட்டங்கள் நிறைவுற்றுள்ளன. 10 வேலைத்திட்டங்கள் நிறைவுறும் தறுவாயில் இருக்கின்றன. ஆளணிப் பற்றாக்குறை மற்றும் ஒரே நேரத்தில் அதிகளவான நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றமை காரணமாக வேலைத்திட்டங்களை குறித்த கால அவகாசத்திற்குள் நிறைவுக்கு கொண்டு வருவது பாரிய சவாலாகக் காணப்படுகிறது. இருப்பினும் நாம் ஒரு சதத்தைக் கூட திரும்பிச் செல்ல இடமளிக்க மாட்டோம். மேலும் அடுத்த வாரமளவில் கம்பரெலியத் திட்டத்தின் ஊடாக இரண்டாம் கட்ட நூறு மில்லியன் கிடைக்கப் பெறவுள்ளது.

எம்மிடம் உள்ள ஆளணி வளத்தைப் பயன்படுத்தி மதிப்பீடுகளை வேகமாக மேற்கொண்டு குறித்த காலத்திற்குள் வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம்.

இதுவரை இவ்வளவு பெருந்தொகையான நிதி ஒரேடியாக எமக்கு கிடைக்கவில்லை. எமக்கு உரியகாலஅவகாசம்இல்லை. ஆகவே உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரும் கூடிய கவனமெடுத்து எமது பிரதேசத்தை முன்னேற்ற வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-30)

யா/ புற்றளை மகா வித்தியாலயம், புலோலி

பழைய மாணவர் சங்க விசேட பொதுக்கூட்டம்

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்க தாய்ச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 11.08.2019 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெறும். சகல உறுப்பினர்களும் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர், (C-7117)
பழைய மாணவர் சங்கம்,
யா/ புற்றளை மகா வித்தியாலயம்

மீசாலைப் பகுதியில் தொடர்ச்சியாக ஒளிரும் புகையிரதக்கடவை மின் சமிக்ஞைகள்

சீர்செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மீசாலைப்பகுதியில் உள்ள புகையிரதப் பாதுகாப்பு கடவைகளில் தொடர்ச்சியாக ஒளிரும் மின்சமிக்ஞைகளால் பொது மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டுள்ளனர்.

மீசாலைப்பகுதியில் சிலவேளைகளில் புகையிரதம் சென்ற பின்னரும்கூட நீண்ட நேரம் மின்சமிக்ஞை வேலைசெய்து கொண்டிருக்கின்றது. சில சமயங்களில் காரணமின்றி திடீரென மின்சமிக்ஞை வேலை செய்கின்றது.

இதனால் அவசர தேவைகளுக்கு செல்கின்ற மக்கள் செய்வது அறியாது நிற்க வேண்டியுள்ளது. பின்னர் இரண்டுபக்கமும் கண்ணுக்கு எட்டிய தூரம் பார்த்துவிட்டே பயப்பீதியுடன் பாதையைக் கடக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக புத்தூர் சந்திக்கு அண்மையில் சிற்றம்பலம் வீதியில் இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. இப் பகுதியில் கொடிகாமம் நோக்கிய பகுதியில் பாரிய வளைவு காணப்படுவதால் அப்பகுதியில் இருந்து வருகின்ற புகையிரதத்தை பார்த்து கடக்கமுடியாத நிலையுள்ளது.

இக்கடவையில் ஏற்கனவே ஒருவர் புகையிரதத்தில் மோதுண்டு உயிரிழந்துள்ளார். இதை விட இக்கடவையில் பலர் தெய்வாதீனமாக உயிர் தப்பிய பல சம்பவங்களும் உள்ளன. அல்லாரை, வெள்ளாம்போக்கட்டி போன்ற பகுதியில் உள்ள மக்கள் ஏ-9 வீதிக்கு செல்வதற்கு இப் பாதையையே பயன்படுத்துகின்றனர்.

எனவே மேலும் அநாவசிய உயிரிழப்புக்களை தவிர்ப்பதற்கு புகையிரதக் கடவை ஒன்றை நிர்மாணித்து அதில் ஒருவரை கடமைக்கு அமர்த்துமாறு பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (5)

பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் கோப்பாய் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப் படுகின்றன. எனவே BR/163/14, BR/163/14/-28766 ஆகிய இலக்கங்களைக் கொண்ட வழக்குகளின் சான்றுப் பொருட்களை பெற்றுக்கொள்ள உரிய ஆவணங்களுடன் அலுவலக நேரத்தில் சமுகமளிக் குமாறு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

கைதடி பராசக்தி பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் விளையாட்டு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை பராமரிப்பு நிலையத்தின் மைதானத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன், சிறப்பு விருந்தினராக கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி, கௌரவ விருந்தினராக கைதடி பொதுநூலக நூலகர் திருமதி ராணி சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்: கொடிகாமம் செய்தியாளர்)

யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும் அண்மையில் கல்லூரி அதிபர் திருமதி நர்மதா பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டார்.

அபிவிருத்திச் சங்கக் கூட்டங்களில் பெண்களின் பங்களிப்பு குறைவு

(சாவகச்சேரி)

சரவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படுகின்ற விவசாய சம்மேளனங்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகிய இரண்டினது நிர்வாகங்களும் புதிதாக தெரிவு செய்யப்பட வேண்டும் எனக் கோரி சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் கு. குகானந்தன் பிரதேசசபைத் தவிசாளரிடம் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாய சம்மேளனங்கள் மற்றும் அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றில் நீண்ட காலமாக ஒரே உறுப்பினர்களே பதவியில் இருக்கின்றனர். அத்துடன் அநேகமான சம்மேளனங்களிலும் சங்கங்களிலும் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்குரிய இடம் கொடுக்கப்படுவதில்லை.

இவற்றைக் கருத்திற் கொண்டு நிர்வாகங்களை மீள் உருவாக்கம் செய்வதற்கு சாவகச்சேரி பிரதேச சபையினர் உரிய திணைக்களங்களுடன் கலந்துரையாட வேண்டும் எனவும் பிரதேச சபையின் மேற்பார்வையுடன் நிர்வாகத்தை மீளுருவாக்க ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மேலும் அவர் கேட்டுக்கொண்டார்.

உறுப்பினரின் கோரிக்கைக்கு பிரதேச சபைத் தவிசாளர் பதிலளிக்கையில்,

விவசாய சம்மேளனங்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஜனநாயக முறைப்படி உறுப்பினர் தெரிவை மேற் கொள்வார்கள் என நம்புவதாகவும் இன்னோர் திணைக்கள விடயத்தில் தம்மால் தலையிடவோ, அறிவுரை கூறவோ முடியாது. நிர்வாகத்தில் தலையிடுவது முறையானதும் அல்ல. தற்போது பெரும்பாலான கூட்டங்களில் பெண்களின் பங்கேற்பு மற்றும் வருகை ஆகியன குறைவாகவே காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார். (5-30)

சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய ஆசிரியர் சிவகுசசீலன் கடந்த 24 ஆம் திகதி யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதவான் அன்னலிங்கம் பிறேம் சங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் நல்லூர் மக்கள் சன சமூக நிலையத்தின் செயலாளரு மாவார். (5)

திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை தமிழ்மன்ற சன சமூக நிலைய கலாசார மண்டபம் நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப் படும். (5)

பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தந்தை செல்வா அரங்கில் அதிபர் எஸ்.கே.எழில் வேந்தன் தலைமையில் நடை பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப் பாளர் (அபிவிருத்தி) ஆ.யோகலிங்கம் (பழைய மாணவர்) கலந்து கொள்வார். (5)

இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
விசாகம்- அனுசம்

27.07.2019

ஆடி 11,சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
தசமி பிற்பகல் 4.23 மணிவரை
கார்த்திகை பிற்பகல் 4.59 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை

வளவன்

சந், புத, ராகு | சூரி, செவ் சுக் | சனி, கேது | குரு

மீனம்

உறவுகள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு, போசன நன்மையுண்டு.

மேடம்

பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

இடபம்

போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், கற்பனை மிகுதியான நாள், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்.

மிதுனம்

எடுத்த காரியங்னளை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம்.

கும்பம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சமபவங்கள் இடம் பெறலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தன்னம்பிக்கை துளிர் விடும் நாள்.

மகரம்

பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவ முண்டு, வியாபாரத்தை விருத்தி செய்ய முற்படுவீர்கள், பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

தனுசு

தொழில் மேன்மையுண்டு, பெரிய மனிதர்களை அனுசரித்துச் வெல்வது நல்லது, காரிய அனுகூலமுண்டு, பகைவர்கள் விலகுவர், போசன சுகமுண்டு.

விருச்சிகம்

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

துலாம்

முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், பணப்பற்றாக்குறைகள் ஏற்படலாம், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், கௌரவ குறைவான நாள்.

கடகம்

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

சிம்மம்

எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்பு வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

கன்னி

புதிய திட்டங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் முண்டு, அதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வர், பயணங்களால் பலனுண்டு.

பொதுக் கூட்டம்

நாரந்தனை சைவ மகா சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன் மணி அம்பாள் ஆலய மண்டபத்தில் சபைத் தலைவர் வே.துரைராசா தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (5)

ஆடிக் கார்த்திகைப் பெருவிழா

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் ஆடிக் கார்த்திகைப் பெருவிழா இன்று 27 சனிக்கிழமை நடைபெறும். இதில் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அபிஷேகம், வைரவப் பெருமான் மடை பொங்கல் என்பன இடம்பெறவுள்ளன. (5)

கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் கடல் நீரேரிப் பகுதிக்குள் பாய்ந்தது

(கரணவாய்)

வேகக் கட்டுப்பாட்டை யிழந்த டிப்பர் வாகனம் வல்லை கடல் நீரேரிப் பகுதிக்குள் பாய்ந்து விபத்துக் குள்ளானது.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் இடம் பெற்றது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

நெல்லியடியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனம் வல்லைப் பாலத்தில் கட்டுப்பாட்டையிழந்து கடல் நீரேரிப் பகுதிக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது. அத்துடன் இதில் பயணித்தவர்களும் காயத்திற்குள்ளாகினர். (5-21-60)

YOGIS

Institute of Beauty Therapy, Hair Dressing & Home Science (Pvt) Ltd.

EXHIBITION

CAKES and SUGAR CRAFT 01.08.2019 அன்று
Yarl Petta Essence Supplier ஆதரவில் வழங்கும்

கேக் கண்காட்சி

திருமண அலங்கார கேக் வகைகள், பிறந்தநாள் கேக் வகைகள், ஜசிங் பூக்களின் அலங்காரங்கள் இன்னும் வித்தியாசமான கேக்குகளின் அலங்கார கண்காட்சி 4 நாட்கள் மட்டும்.

01-08-2019 அன்று காலை 9.00 மணிக்கு பிரதம விருந்தினர் கௌரவ விஜயகலா மகேஸ்வரன் (MP) கல்வி இராஜாங்க அமைச்சர் அவர்களால் மங்கலகரமாக ஆரம்பித்து வைக்கப்படும்.

1ஆம் திகதி காலை 11 மணிமுதல் இரவு 8 மணிவரையும்
2ம்,3ம்,4ம் திகதிகளில் காலை 10 மணிமுதல்
இரவு 8 மணிவரையும் நடைபெறும்.

நடைபெறும் இடம்: 75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (C-7116)
(நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்துக்கு முன்பாக)

யாழ்ப்பாணம்-கோட்டை

ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தானத்தின்

இரதோற்சவம் – 2019

முன்னவனே கோட்டை முனியப்பா
யாழ்.நகரில் மன்னும் பரனே
மகாதேவா பொன்னும் பதமும்
கலையாவும் பாலிப்பாய் என்றன்
இதயம் தனிலே இருந்து

25 ஆம் நாள் திருவிழா 27.07.2019 இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம்பெறும். மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று இரதபவனி இடம்பெறும். 26 ஆம் நாள் திருவிழா 28.07.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவத்தைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். 27 ஆம் நாள் திருவிழா 29.07.2019 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து பூங்காவனம் இடம்பெறும். 28 ஆம் நாள் திருவிழா 30.07.2019 செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு வைரவ சாந்தியுடன் நிறைவு பெறும்.

இரதோற்சவத்தை சிறப்புற வாழ்த்துவோர்:

கிருபா லேணர்ஸ் ம.லோகராஜன் குடும்பம்

Regd No.Ds/589, Kiruba Learners, Govt.Approved A Grade Driving Training School
அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை (7088)
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், தொ.இல: 021 222 4353, 021 492 3200, 077 722 5292

ஆடி மாத இராசி பலன்கள்

17.07.2019-17.08.2019

விகாரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி பகவான் லாபஸ்தானத்தில் வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். அவரது பார்வை உங்கள் இராசியின் மீது பதிகின்றது. எனவே திடீர், திடீரெனக் குணங்கள் மாறும். இனம் புரியாத கவலை மனதை ஆட்கொள்ளும். தாழ்வுமனப்பான்மையும் தலைதூக்கும். தன்னம்பிக்கையும் தைரியமும் தான் உங்களுக்கு மூலதனம். எனவே அதைக் கைவிட வேண்டாம். கொஞ்சம் பொறுமையை மட்டும் கடைப்பிடியுங்கள்.

இந்த மாதத்தில் குரு வக்கிர நிவர்த்தியாகப் போகின்றார். குருவின் வக்கிர நிவர்த்திக்குப் பிறகு உங்கள் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். தனலாபாதிபதியான குருபகவான் வக்கிர இயக்கத்தில் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. அவர் வக்கிர நிவர்த்தியான பிறகு பணப் புழக்கம் நன்றாக இருக்கும். மனதில் இருந்த இனம்புரியாத கவலை மாறும். நிரந்தர வருமானம் கிடைக்க வழிபிறக்கும். உத்தியோகம், தொழிலில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும்.

குடும்பஸ்தானத்தை குரு பார்ப்பதால் குடும்பத்தில் இதுவரை தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். பஞ்சம ஸ்தானத்தில் புதன், சுக்கிரன், ராகு ஆகிய மூன்று கிரகங்களும் இருக்கின்றார்கள். புத-சுக்கிர யோகம் செயற்படப் போகின்றது. எனவே வாரிசுகளால் உங்களுக்குப் பெருமை ஏற்படும். அவர்களின் வருங்கால நலன் கருதி நீங்கள் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். பெண்வழிஉறவுகளால் மாறும் பிரச்சினைகள் ஒவ்வொன்றாக நல்ல முடிவிற்கு வரும்.

6ஆம் இடத்தில் சூரியன், செவ்வாய் ஆகிய இரண்டு கிரகங்களும் சஞ்சரிக்கின்றார்கள். எனவே உத்தியோகத்தில் இதுவரை இருந்த மந்தநிலை மாறும். சந்தர்ப்பங்களை கைநழுவ விட வேண்டாம். தொழில்புரிவோருக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். என்னயிருந்தாலும் உங்கள் இராசியை வக்கிர இயக்கத்தில் உள்ள சனி பார்ப்பதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். வைத்தியச் செலவுகளும் உருவாகும். மனநிலையில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்படும். எனவே இதற்குப்பரிகாரமாக ஒவ்வொரு சனிக்கிழமையும் நீங்கள் சனிக வசம் பாடி சனி பகவானை வழிபடுவதோடு அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்ள வேண்டும். விஸ்வரூப ஆஞ்சநேயர் தரிசனம் வெற்றியைத் தரும். வெண்ணெய் சாற்றி வழிபடுவது, வெற்றிலை மாலை சூட்டுவது, வடைமாலை அணிவிப்பது போன்ற பரிகாரங்களால் வளர்ச்சியில் உள்ள தளர்ச்சி அகலும்.

கடக சுக்கிரனும், சிம்ம சுக்கிரனும்

ஜூலை 24 ஆம்திகதி கடக இராசிக்கும் ஓகஸ்ட் 17 ஆம் திகதி சிம்ம இராசிக்கும் சுக்கிரன் செல்கின்றார். கடகத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் பொழுது பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. தாய்வழி ஆதரவு திருப்தி தரும். சிம்மத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் பொழுது கல்யாண வாய்ப்புகள் கைகூடும். பெண்களால் பெருமை சேரும். பெற்றோர்களின் ஆதரவோடு இல்லத்தில் ஒரு நல்ல காரியம் நடைபெறும். கற்ற கல்விக்கேற்ற வேலை கிடைக்கும். பிரிந்தவர்கள் வந்திணைவர்.

கடக புதனின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 3 ஆம் திகதி கடக இராசிக்கு புதன் வருகின்றார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு. பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் மறைவிடத்திற்கு வரும்பொழுது பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். என்றாலும், பிள்ளைகளால் சில பிரச்சினைகள் வரத்தான் செய்யும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்விற்கு கொடுத்து உதவி செய்வீர்கள். சேமிப்பில் கொஞ்சம் கரையலாம். செல்வாக்கு மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து சில நல்ல காரியங்களை முடித்துக்கொடுப்பர்.

சிம்மச் செவ்வாயின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 10 ஆம்திகதி சிம்மத்திற்கு செவ்வாய் வருகின்றார். இக்காலம் ஒரு இனிய காலமாகும். 3, 10 இற்கு அதிபதியான செவ்வாய் 7 இல் வரும் பொழுது உடன் பிறப்புகளின் வழியில் ஒரு நல்ல காரியம் நடைபெறலாம். ஊர் மாற்றங்களைப் பற்றிச் சிந்திப்பீர்கள். ஒரு சிலருக்கு வீடு மாற்றங்கள் உறுதியாகலாம். கூட்டு முயற்சிகளில் இலாபம் கிடைக்கும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு சில காரியங்கள் கைகூடும். உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். இடம், பூமி வாங்கும் யோகமும் உண்டு.

குருவின் வக்கிர நிவர்த்திக் காலம்

ஓகஸ்ட் 7 ஆம் திகதி குருபகவான் வக்கிர நிவர்த்தியாகின்றார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். குரு உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். எனவே குடும்ப முன்னேற்றம் கூடும். தாய்வழி ஆதரவு பெருகும். வாகனம் வாங்கிப் பயணிக்கும் யோகமும் ஏற்படும். எதிரிகள் விலகுவர்.

இம்மாதம் ஆடி வெள்ளியன்று அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். ஆடிக்கார்த்திகையன்று முருகப்பெருமானை வழிபாடு செய்யுங்கள். ஆடி அமாவாசையன்று முன்னோர்களை வழிபாடு செய்யுங்கள். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் குரு வக்கிர நிவர்த்திக்குப் பிறகு குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். மாதத்தின் முன்பகுதியில் கொஞ்சம் மனக்குழப்பங்கள் இருந்தாலும் தன்னம்பிக்கையை தளரவிட வேண்டாம். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். தொகை வருவதில் தடை ஏற்படாது என்றாலும் கூட சில பணிகள் பாதியிலேயே நிற்கலாம். கணவன்-மனைவிக்குள் அனுசரித்து செல்வதே அனுகூலம் தரும். தாய் மற்றும் சகோதரர்களின் உறவு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக

குருவின் வக்கிர நிவர்த்திக்குப் பிறகு யோகம்

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

விகாரி வருடம் ஆடிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குருபகவான் வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். ஒக்டோபர் 10 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிப் பலம்பெறும் பொழுது அவரது பஞ்சம பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. குரு பார்வையால் குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் திருப்தி நிலவும். இதுவரை கடுமையாக முயற்சித்தும் முடிவடையாத காரியங்கள் எளிதில் முடிவடையும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

குருவின் 5, 9 ஆகிய பார்வை மிஞ்சும் பலன் தரும் என்பார்கள். அந்த அடிப்படையில் பலம்பெற்று குரு இருப்பதால் இதுவரை இருந்த தடைக்கற்கள் எல்லாம் இனிப் படிக்கற்களாக மாறும். தடுமாற்றங்கள் அகலும். தன வரவு திருப்திகரமாக இருக்கும். மன தளவில் செய்ய நினைத்ததை மறு கணமே செய்து முடிப்பீர்கள். பகையாக இருந்தவர்கள் இனி உறவாக மாறுவர். தொழில் முன்னேற்றமும் எதிர்பார்த்த இலாபமும் கிடைக்கும். சுகஸ்தானத்தில் புதன், சுக்கிரன், ராகு ஆகிய மூன்று கிரகங்கள் இருக்கின்றார்கள். எனவே ஆரோக்கியத் தொல்லை அகலும். பழைய வாகனங்கள் பழுதானதை முன்னிட்டு புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டு. கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக மாறும். குல தெய்வப் பிரார்த்தனைகள் பலன் தரும்.

1 இல் ஒரு பாவக்கிரகமாவது இருக்க வேண்டும் என்பது நியதி. இம்மாதம் உங்கள் இராசிக்கு 10 இல் சனி, கேது ஆகிய இரண்டு கிரகங்களும் இருக்கின்றது. மேலும் மாதத் தொடக்க நாளில் சந்திரனும் அவரோடு இணைந்திருக்கின்றார். எனவே தற்போதுள்ள தொழில் நீங்கலாக கிளைத்தொழில் தொடங்கும் யோகம் கூட ஒரு சிலருக்கு ஏற்படும். அந்தக்கிளை தொழிலை பிள்ளைகளைக் கொண்டோ, அல்லது உறவினர்களைக் கொண்டோ மேற்பார்வை பார்த்துக்கொள்ளச் சொல்வீர்கள்.

பஞ்சம ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய் இருப்பதால் பிள்ளைகளுக்கு கல்வி கடன், கடமைகளைச் சிறப்பாகச் செய்வீர்கள். அரசு வேலைக்கு முயற்சி செய்திருந்தால் அது கிடைக்கும். இம்மாதம் வெள்ளிக்கிழமை அன்று கவச பாராயணம் செய்து அம்பிகையை வழிபட்டு வருவது நல்லது. ஆடி அமாவாசையன்று முன்னோர்களை வழிபட்டால் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

கடகச் சுக்கிரனும் சிம்மச் சுக்கிரனும்

ஜூலை 2 ஆம் திகதி கடக இராசிக்கும் ஓகஸ்ட் 17 ஆம் திகதி சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். கடகத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் பொழுது விரயங்கள் அதிகரிக்கும். பெண் வழிப்பிரச்சினைகள் தலைதூக்கும். வாய்ப்புகள் வந்தும் உபயோகப்படுத்திக் கொள்ள முடியவில்லையே என்று கவலைப் படுவீர்கள். சிம்ம சுக்கிரனின் ஆதிக்க காலத்தில் விபரீத இராஜயோகம் செயற்படும். திட்டமிடாது செய்யும் காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். திடீர் திருப்பங்கள் பலவும் நிகழும். வராத சம்பளப்பாக்கிகள் வந்து சேரும்.

கடக புதனின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 3 ஆம் திகதி கடக இராசிக்கு புதன் வருகின்றார். இதன் விளைவாக பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். பிரச்சினைகள் படிப்படியாகத் தீரும். உறவினர்களின் பகை மாறும். உயர்ந்த மனிதர்களின் சந்திப்பால் சில காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும். வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளலாமா என்று

சிந்திப்பீர்கள்.

சிம்மச் செவ்வாயின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 10 ஆம்திகதி சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். இக்காலத்தில் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும்.

சக பணியாளர்களாலும் ஒரு சிலருக்குத் தொல்லைகள் வரலாம். உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கவில்லையே என்று ஒருசிலர் வேலையிலிருந்து விலகிக் கொள்ளலாமா என்று சிந்திப்பர். ஆயினும் குரு வக்கிர நிவர்த்தி வரை கொஞ்சம் பொறுமையாக இருந்தால் பிறகு இனிமையான வாழ்க்கை அமையும்.

குருவின் வக்கிர நிவர்த்திக் காலம்

ஓகஸ்ட் 7 ஆம் திகதி குருபகவான் வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிநாதனாகவும் 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் குருபகவான். அவர் பார்வையால் உங்கள் இராசி புனிதமடைகின்றது. எனவே இனி தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை கொடுத்தவர்கள் தோள் கொடுத்து உதவுவர். பட்ட கஷ்டங்கள் தீர்ந்தது என்று சொல்லி மகிழ்வீர்கள்.

பணத்தேவைகள் பூர்த்தியாகும். வெற்றிக்குரிய செய்திகள் வந்து கொண்டேயிருக்கும் இம்மாதம்வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் வரவும், செலவும் சமமாகும் மாதமாகும். மாதத்தின் முற்பகுதியில் தடைகளும் தாமதங்களும் ஏற்படலாம். பிற் பகுதியில் பிரச்சினைகள் ஒவ்வொன்றாக தீரும். வருமானமும் திருப்தி தரும். வாகனம், வீடு வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். கணவன்-மனைவிக்குள் எப்பொழுதும் போல ஒற்றுமை சீராக இருக்கும். பிரச்சினைகள் உருவானாலும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலம் மகிழ்ச்சியை வரவழைத்துக்கொள்ள இயலும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைப்படத்தக்கதாக இருக்கும். வெளிநாடு சென்று படிக்க விரும்பும் பிள்ளைகளுக்கு அது கைகூடும். உடன் பிறப்புகளும் தாய்வழியிலும் ஆதரவு சிறப்பாக இருக்கும். பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகாரிகளின் நல்லாதரவோடு எதிர்பார்த்த இலாகா மாற்றம் கிடைக்கும். சம்பள உயர்வு பற்றிய தகவலும் வரலாம். வியாழக்கிழமை தோறும் குரு பகவானையும், சனிக்கிழமை தோறும் அனுமனையும் வழிபடுவது நல்லது.

(முற்றும்)

சுபச்செய்திகள் வந்து சேரும்

ஷரியா சட்டத்தில் கைவைக்க எவருக்கும் இடமளிக்க மாட்டோம்

அசாத் சாலி கூறுகிறார்

(கொழும்பு)

இஸ்லாமியர்களுக்கான சட்டமான ஷரியா சட்டத்தில் மாற்றங்களை செய்ய எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தெரிவித் துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், ஷரியா சட்டம் குறித்து புரிந்து கொள்ள வேண்டும்.

அதனைத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. அந்த சட்டம் என்பது முஸ்லிம் மக்களுக்குரிய சட்டம். அதனை வேறு இனத்த வர்களுக்கு அமுல்படுத்துவதி ல்லை. அந்த சட்டம், வேறு எவ ரையும் பாதிக்காது.

அந்தச் சட்டத்தை நாங்கள் பின்பற்ற வேண்டுமே அன்றி, அரசாங்கமோ, அமைச்சர்களோ பின்பற்ற வேண்டிய சட்டமல்ல.

இதனால், ஷரியா சட்டத்தில் கைவைக்க நாங்கள் இடமளி க்க மாட்டோம்.

மருத்துவர் சேகு சிஹாப்தீன் மொஹமட் ஷாபிக்கு எதிராக குருநாகல் நகரசபை ஊழியர் களைப் பயன்படுத்தி ஆர்ப்பாட் டம் நடத்தியுள்ளனர்.

அத்துடன் பெண்களின் கர்ப் பப்பையின் பலோப்பியன் குழாய் ஷாபியை தூக்கிலிட்டு கொல்ல வேண்டும் என்கிறார்.



தொடர் பான நிபுணராக நாடாளு மன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் மாறியுள்ளார்.

மிகப் பெரிய பண்டிதரான உதய கம்மன்பில, மருத்துவர் என்ன செய்ய வேண்டும் என்பதை நீதிமன்றம் தீர்மானி க்கும் முன்னர், அனைவரும் அதனை தீர்மானித்து விட்ட னர்.

இதனால், நீதிமன்றத்தினால் வழக்கொன்றை நடத்தி செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள் ளது. அரசாங்கம் அப்பாவி மக் களை கடந்த மூன்று மாதங்க ளாக தடுத்து வைத்துள்ளது.

அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களை விடுதலை செய்ய முடியாதவர்கள் மீது இடி விழும். அத்துரலியே ரத்ன தேரரை ஏன் கைது செய்ய முடியாது.

அவர் வரலாறு முழுவதும் அரசாங்கங்களுக்கு தவறு செய் துள்ளார் எனவும் அசாத் சாலி மேலும் தெரிவித்தார். (ஜ)

மருதமுனையை பிரதேச செயலகமாக்குமாறு வலியுறுத்தி கையெழுத்து வேட்டை ஆரம்பம்



(கல்முனை)

கல்முனை மாநகர பகுதியில் அமைந்துள்ள மருதமுனைக்கு நிர்வாக ரீதியான பிரதேச செய லகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வை த்து கையெழுத்து வேட்டை ஆர ம்பிக்கப்பட்டுள்ளது.

பள்ளிவாசல்கள் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை இந்தக் கையெழுத்து வேட்டை முன்னெ டுக்கப்பட்டது.

மருதமுனைக்கு நிர்வாக ரீதியான பிரதேச செயலகம் கோரி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க, உள்நாட்டு அலுவல் கள் அமைச்சர் வஜிர மற்றும் முஸ்லிம் அமைச்சர்கள், நாடா ளுமன்ற உறுப்பினர் களிடம் குறித்த மகஜர் கையளிக்கப்படவு ள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரி வித்துள்ளனர். (ஜ)

சஜித் பிரேமதாஸவே ஜனாதிபதி வேட்பாளருக்கு பொருத்தமானவர்-மகரூப்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேம தாஸ தான் ஜனாதிபதி வேட் பாளருக்கு பொருத்தமானவர் என நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மகரூப் தெரிவித்துள் ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி என்ற கட்சி போர்வைக்குள் சகல சிறுபான்மைக் கட்சிகளும் ஒன்றி ணைந்து அண்மையில் இடம் பெற்ற கலந்துரையாடல் மூலமே இவ்விடயம் தெரியவந்ததாக அவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் அமைச்சர் சஜித் தலைமையில் செமட்ட செவண இரு மாதிரிக் கிராமங்களை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார். தொடர்ந்தும் அவர் உரை யாற்றுகையில்,

தற்போது அசாதாரண சூழ் நிலையே நாட்டில் ஏற்படுகிறது. எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று இடம்பெற ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறு மய, தோட்டத் தொழிலாளர் காங் கிரஸ் போன்ற கட்சிகள் ஒன்றி ணைந்து ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கலந்தாலோசித்ததில் சஜித் பிரேமதாஸ பொது வேட்பா ளராக ஜனாதிபதித் வேட்பா ளருக்கு பொருத்தமானவர் என சிரேஷ்ட அமைச்சர்கள் பங்கு கொண்ட ஐக்கிய தேசிய முன் னணி ஊடாக களமிறக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைக்குத் தீர்வு ஜனா திபதித் தேர்தலே. சிறுபான்மை சமூகத்தை அரவணைக்கும் தலைவராக சஜித் பிரேமதாஸ இடம்பிடிப்பார்.

இந்த நாட்டில் பிரதமருடன் பிரதி தலைவர் சஜித் இணைந்து ஸ்திரமான ஆட்சியை உரு வாக்க வேண்டும்.

இனவாதங்களை ஒழித்து மக்களுடைய வாழ்வில் அதா வது வடக்கு மற்றும் கிழக்கு தோட்டத்தொழிலாளர் களின் உரிமைகள் பாதுகாப்பு விடயங் களை உறுதிப்படுத்த வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ஜ)

யாழ்.தென்மராட்சி வரணி கரம்பைக்குறிச்சி முன்பள்ளி சிறுவர்களுக்கான வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளி முகாமைத் துவக்குழுத் தலைவர் திருமதி துஷ்யந்தி ஜெகரூபன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூகப்புரவலரும் வடக்கு மாகாண கிருபா சாரதி பயிற்சிக் கல்லூரி தலைவருமான அழகசுந்தரம் கலந்து கொண்டார்.

(படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(நெளுக்குளம்)

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக சுழற்சிமுறை உணவுதவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் வவுனியா கந்தசுவாமி கோவிலில் தேங்காய் உடைத்து விசேடவழிபாடுகளை மேற்கொண்ட காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கந்தசுவாமி கோவில் வீதி வழியாக மணிக் கூட்டு கோபுர சந்தியை அடைந்து அங்கிருந்து கண்டி வீதி வழியாக தொடர் போராட்டம் மேற்கொள்ளும் இடத்தை சென்றடைந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், தமிழ்க்கூட்டமைப்பின் சாணக்கியம், நல்லிணக்கம், இராஜதந்திரம் யாவும் இனப்படுகொலையே என்ற வாசகம்பொறிக்கப்பட்ட பதாதையை ஏந்தியிருந்ததுடன், அமெரிக்க ஜரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளையும்கைகளில்ஏந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்களது போராட்டம் ஓரிரு நாட்களில்900 நாட்களை எட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-299)

முல்லைத்தீவில் 7 குளங்கள் 21.3 மில்லியனில் புனரமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பாண்டியன் குளம் கமநலசேவை நிலையத்தின் கீழ் உள்ள ஏழு குளங்கள் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் 21.3 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்டியன்குளம் கமநலசேவை நிலையத்தின் கீழ் உள்ள கைவிடப்பட்ட குளங்கள் மற்றும் கமவீதிகள் வாய்க்கால்களை புனரமைத்து தருமாறு விவசாயிகள், விவசாய அமைப்புக்கள் விடுத்து வரும் கோரிக்கைகளுக்கு அமைவாக பல்வேறு வேலைத்திட்டங்கள் கடந்த ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டிலும் இதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் 201 ஆம் ஆண்டின் முதற்கட்டமாக மேற்படி அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் ஏழு குளங்கள் 21.3 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பாண்டியன்குளம் கமநலசேவை நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, மரமஞ்சான் குளம் 5 மில்லியன் ரூபா செலவிலும் வேணாபனிச்சை குளம் 5 மில்லியன் ரூபா செலவிலும் இராமியன் குளம் 4 மில்லியன் ரூபா செலவிலும் தேவிகுளம் 4.3 மில்லியன் ரூபா செலவிலும் சாளம்பன்குளம் 1.5 மில்லியன் ரூபா செலவிலும் சிறாட்டிகுளம் 1 மில்லியன் ரூபா செலவிலும் இளமருதன்குளம் 0.5 மில்லியன் ரூபா செலவிலுமாக மேற்படி ஏழு குளங்களில் 21.3 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கமநல சேவை நிலையத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315-350)

மின் தடையால் மாணவர்கள் அவதி

(வவுனியா)

வவுனியாவில் முன்னறிவித்தலின்றி அடிக்கடி இடம்பெறும் மின் வெட்டு காரணமாக பரீட்சை நேரத்தில் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளிலும் எந்தவிதமான முன்னறிவித்தலுமின்றி கடந்த சில நாட்களாக மின்வெட்டு இடம்பெறுகின்றது. இதன் காரணமாக அரச அலுவலகங்கள், வர்த்தகர்கள், மாணவர்கள் எனப் பலரும் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இவைதவிர, தற்போது மாணவர்களுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் எதிர்வரும் 4 ஆம் திகதி புலமைப்பரிசில் பரீட்சையும் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் உயர்தரப் பரீட்சையும் நடைபெறவுள்ள நிலையில் இவ்வாறு இடம் பெறும் மின் வெட்டினால் மாணவர்களது கல்வி நடவடிக்கைகளும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளும் பாதிப்படைந்துள்ளதாக பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (9-250)

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் சங்கிலி திருடர்கள் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பரந்தன் இரணடாம் கட்டைக்கும் முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரிக்கும் இடையிலான பகுதியில் மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடுகளை உருமறைப்புச் செய்தவர்கள் பெண்களின் சங்கிலிகளை அறுத்துச்செல்லும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த 21 ஆம் திகதி இரு பெண்கள் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது இலக்கத் தகடுகளை மறைத்தவாறு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், குறித்த பெண்கள் அணிந்திருந்த சங்கிலியை அறுக்க முயற்சித்துள்ளனர்.

பின்னர் 22, 23 ஆம் திகதிகளிலும் இதேபோன்று சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. நேற்று முன்தினம் கிராம உத்தியோகத்தர் ஒருவரின் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்தவர்களினால் அறுக்கப்பட்டுள்ளது. பரந்தனுக்கும் முரசுமோட்டைக்கும் இடையில் நடைபெறுகின்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக மதத் தலைவர்களினால் கிளிநொச்சி பொலிஸாருக்கு ஆதாரங்களுடன் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் கிளிநொச்சி பொலிஸார் மோட்டார் சைக்கிள் கொள்ளையர்களை கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (9-316-350)

ஆன்மீக பயணம்

(கண்டாவளை)

கிராமப்புற முதியோர்களது உளசமூக மேம்பாட்டை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் ஊரியான் கிராம முதி யோர் சங்க உறுப்பினர்கள் 50 பேர் ஆன்மீகப் பயணமாக திருகோணமலை மாவட்டத்தின் திருத்தலங்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை அழைத்துச் செல்லப்ப வுள்ளனர்.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலரின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலியா காவேரி கலாமன்றம் வன்னி கோப் அமைப்பின் அனுசரணையில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கன்னியா வெந்நீரூற்று, சிறிலட்சுமி நாராயணன் கோவில், திருகோணேஸ்வரம் ஆகிய தலங்களுக்கு முதியவர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். (9)

வவுனியா பேருந்து நிலையத்தில் பயணிகள் மீது பொலிஸார் அடாவடி

(நெளுக்குளம்)

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள சோதனை நிலையத்திலிருந்த பொலிஸார் நேற்றுக்காலை வாரிக்குட்டியூர் பகுதியிலிருந்து புதிய பேருந்து நிலையத்திற்கு பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்தில் பயணித்த பயணிகளை பேருந்தைவிட்டு கீழே இறங்கவிடாது பேருந்தின் இரு கதவுகளையும் மூடி பயணிகள்மீது அடாவடியில் ஈடுபட்டிருந்தனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கையில்,

புதிய பேருந்து நிலையத்தில் கடந்த மூன்று மாதங்களாக சோதனைச்சாவடி நிலையத்தினை அமைத்துள்ள பொலிஸார் பேருந்து நிலையத்திற்குச் செல்லும் பயணிகள் மீது சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர். நேற்றுக்காலை வாரிக்குட்டியூர் பகுதியிலிருந்து பேருந்து நிலையத்திற்கு பயணிகளை ஏற்றிச்சென்ற தனியார் பேருந்து ஒன்று சோதனைச் சாவடியில் பொலிஸார் இல்லாத காரணத்தினால் பேருந்தினை உள்ளே செலுத்தி பயணிகள் இறக்கிக்கொண்டிருந்துள்ளனர்.

அப்போது திடீரென்று பேருந்தை அணமித்த பொலிஸார் பேருந்தின் இரண்டு பிரதான கதவுகளையும் மூடியதுடன் பின்னர் பேருந்திலுள்ள பய ணிகளை இறக்கிச் சோதனை மேற்கொண்டனர். இந்நடவடிக்கை பொலிஸாரின் அடாவடித்தனத்தை எடுத்துக் காட்டியுள்ளதாகவும், பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பாக செய்தி சேகரிக்க சென்ற வவுனியா ஊடகவியலாளரை பொலிஸார் வழிமறித்து அவரைப் புகைப்படம் பிடித்து அவரது பணிக்கு அச்சுறுத்தல் விடுக்கும் நடவடிக்கையை அங்குள்ள சோதனைச்சாவடியிலுள்ள பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

நிலைமைகளை பொலிஸாருக்கு தெரியப்படுத்திய ஊடகவியலாளர் இவ்விடயம் குறித்து வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அலுவலகத்திலுள்ள பொலிஸ் உத்தியோகத்தரின் கவனத்திற்குக் கொண்டு வந்து பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (9-299)

கறுப்பு ஜூலை நினைவு நாள்

(மன்னார்)

வெலிக்கடை சிறைச்சாலையில் கொடூரமாக கொல்லப்பட்ட விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பத்தலைவர்களான தலைவர் தங்கதுரை, தளபதி குட்டிமணி, போராளிகளான ஜெகன், தேவன், நடேசுதாசன், குமார், சிவபாதம் சிறீக்குமார், மரியாம்பிள்ளை குமார குலசிங்கம் உட்பட 53 அரசியல் கைதிகளின் 36 ஆவது நினைவு நாள் நிகழ்வு நேற்று முன்தினம் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் இடம் பெற்றது.

குறித்த நினைவு நாள் நிகழ்வில் இறந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அவர்களின் படங்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டு தீபம் ஏற்றி மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அத்துடன் தமிழ் மக்களுக்காய் இன்னுயிர் ஈந்த தியாகிகளின் தியாகத்தை வெளிப்படுத்தும் சுவரொட்டிகளும் பொது இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டன. (9-285)

முல்லைத்தீவு - முள்ளியவளைப் பகுதியில் அமைந்துள்ள கதிர் கற்கை வளாக புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. சுவிஸ் புளியங்கூடல் மாணவர் வளாகம் மற்றும் சுவிஸ் றொமான் சோன் வாழ் அதன் நண்பர்களின் அனுசரணையில் அமைக்கப்பட்ட, குறித்த புதிய கட்டடத்தை முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா - ரவிகரன் திறந்து வைத்தார். அத்துடன் மாணவர் ஒருவருக்கு புளியங்கூடல் மாணவர் வளாக கட்டுப்பாட்டாளரால் துவிச்சக்கரவண்டியும் குறித்த கட்டடத்திற்கான நிதியுதவி வழங்கியதற்காக, புளியங்கூடல் கற்கை வளாக கட்டுப்பாட்டாளர் முருகேசு விஜயனின் சேவையினைப் பாராட்டி நினைவுச் சின்னம் ஒன்று வழங்கப்பட்டது. (படம்:-அக்கராயன் செய்தியாளர்)

ஆனைவிழுந்தான் குளம் கிராமத்தில் குடிநீர்த்திட்ட வேலைகள் முன்னெடுப்பு



(அக்கராயன்)

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் கிளிநொச்சி ஆனைவிழுந்தான் குளம் கிராமத்தில் குடிநீர்த் திட்டத்திற்கான கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அப் பகுதியில் உள்ள 427 குடும்பங்களுக்கு தனித்தனியாக குடிநீர் வழங்குவதற்கான கட்டுமான வேலைகளே தற்போது நடைபெறுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் குடிநீர் நெருக்கடிகளை எதிர்கொள்கின்ற கிராமங்களில் ஒன்றாக ஆனைவிழுந்தான் குளம் கிராமம் காணப்படுகின்றது.

1983 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் ஏற்பட்ட வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென உருவாக்கப்பட்ட கிராமம் ஆனைவிழுந்தான் குளம் கிராமம் ஆகும்.

பூநகரியின் பல கிராமங்கள் உவர் அடைந்ததன் தொடர்ச்சியாக ஆனைவிழுந்தான் குளம் கிராமம் பெருமளவு நிலப்பரப்பு உவர் நிலங்களாக மாறிவருகின்றன. நன்னீர்க் கிணறுகள் உவர் நீராக மாறுவதன் காரணமாக குடிநீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது குடிநீர்த் திட்டத்திற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (9-350)

2025 இல் அனைவருக்கும் வீடு

அமைச்சர் சஜித் தெரிவிப்பு

எல்லோம் எம்முடன் சேர்ந்து ஒத்துழைப்பு வழங்கினால், 2025 ஆம் ஆண்டு வரும்போது 25,000 வீடுகளை நாட்டளாவிய ரீதியில் அனைத்து மக்களுக்கும் வழங்குவேன் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்பட்ட உதயம் நகர் மற்றும் ஆதவன் நகர் ஆகிய இரண்டு மாதிரிக் கிராமங்களில் அமைக்கப்பட்ட 50 வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

இச் செயற்றிட்டம் முல்லைத்தீவில் 76 வீட்டுத்திட்டத்திற்கு மேலாக நடைமுறையில் உள்ளன. அதேபோல வவுனியாவில் 54 வீட்டுத்திட்டத்திற்கு மேலாக நடைமுறையில் உள்ளன. ஒட்டுமொத்தமாக வடக்கிலே 500 வீட்டுத் திட்டங்களுக்கு மேல் நடைமுறையில் உள்ளன.

அனைவருக்கும் வீட்டுத் தேவைகள் காணப்படுகின்றன.

எனவே வீடுகள் தேவை, காணிகள் தேவை என்பதற்காக நீங்கள் யாரிடமும் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. உங்களின் சேவகனாக உங்களிடத்திலே வருகின்றேன். உங்கள் பிரச்சினைகளை என்னிடத்திலே கூறுங்கள். உங்களுக்கான வீட்டுத்திட்டங்களை வழங்குவதற்கு நான் தயாராகவிருக்கின்றேன்.

இலங்கையில் வாழும் அனைத்து உறவுகளுக்கும் வீடுகளை வழங்க நான் தயாராக இருக்கின்றேன். எனவே உங்களுடைய ஒத்துழைப்புடன் 2025 ஆம் ஆண்டுவரை அனைவருக்கும் வீடு என்னும் தலைப்பினூடாக இந்த வீடுகளை வழங்க தயாராகவுள்ளேன் என மேலும் தெரிவித்தார். (9)

விசுவமடு ஏற்று நீர்ப்பாசன திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு விசுவமடு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தினை சிறப்பாகச் செயற்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இத்திட்டத்தின் கீழான விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். 1970 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட மேற்படி ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் போர்ச் சூழல் காரணமாக சீர்குலைந்து காணப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டின் பின்னர் கூட இத்திட்டம் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படவில்லை. இத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கு ஒரு கோடி வரையான நிதி தேவைப்படுகின்றது. இத்திட்டத்தை சிறப்பாகச் செயற்படுத்துவோம் என கிராமத்திற்கு வருகை தரும் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் வழங்குகின்ற வாக்குறுதிகளை மறந்து விடுகின்றனர்.

ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் நூற்றுக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் உயரும்.

தற்போது இத்திட்டம் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படாத தன் காரணமாக பயிர்ச் செய்கைகள் வெற்றிகரமாக செய்ய முடியாது உள்ளது.

செய்கை பண்ணப்படுகின்ற பயிர்ச் செய்கைகளை யானைகளும் குரங்குகளும் அழித்து வருவதாகவும் தெரிவிக்கும் விவசாயிகள் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை சிறப்பாகச் செயற்படுத்துவதற்கு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-350)

நுண்நிதி நிறுவனங்களின் அடாவடியால் தொடர்ந்தும் பாதிக்கப்படும் பெண்கள்

(நெளுக்குளம்)

வவுனியா சாந்த சோலை பகுதியில் நுண்நிதி நிறுவனத்தின் பணியாளர்களது அடாவடித்தனங்கள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாகவும் இவ்வாறான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 5.50 மணியளவில் சாந்த சோலைக் கிராமத்திற்குச் சென்ற வவுனியா 2 ஆம் குறுக்கு தெரு வீதியிலுள்ள நிதி நிறுவனப் பணியாளர்கள் இருவர் அப்பகுதியில் கடன் பெற்றுக்கொண்ட குழுத் தலைவி வீட்டிற்குச் சென்று இறுதி நினைவூட்டல் கடிதம் ஒன்றை வழங்கியதுடன் பணத்தை தண்டப்பணத்துடன் செலுத்துமாறும் கோரியுள்ளனர்.

இதன்போது இவ்வாறு மாலை 5.50 மணியளவில் வீடுகளுக்குச் சென்று கடன் பணம் அறவிடுவது அனுமதி மறுக்கப்பட்டுள்ளது உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்டபோது அவ்வாறான ஆவணங்கள் ஏதும் உங்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் காண்பிக்குமாறு கோரி தகாதவார்த்தைகளால் அப் பெண்மணியிடம் நடந்து கொண்டதாகவும் அப் பகுதிக்குச் சென்ற ஊடகவியலாளரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல மாதங்களுக்கு முன்னர் சாந்த சோலைப் பகுதிக்குச் சென்று நுண்நிதி நிறுவனங்கள் செயற்படுவதற்கும் வீடுகளுக்குச் சென்று பணம் அறிவிடுவதையும் தமது கிராமத்திற்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் கடன் பெற்றுக் கொண்ட சிலரினால் செலுத்தப்படாமலிருந்த நிலுவைப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக கடந்த சில தினங்களாக அப் பகுதிகளுக்குச் சென்ற நுண்நிதி நிறுவனப் பணியாளர்கள் அவதானிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் அப்பகுதிப் பெண்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

சாந்தசோலை பெண்களின் இக்குற்றச்சாட்டுக் குறித்து நுண்நிதி நிறுவனத்தின் முகாமையாளர் கி.ஸ்ரீபிரசாத்திட்டம் தொடர்புகொண்டு கேட்டபோது,

நேற்று முன்தினம் மாலை சாந்தசோலைக் கிராமத்திற்கு பணம் அறவிடுவதற்காக எமது நிறுவனத்தின் பணியாளர்கள் செல்லவில்லை. இறுதி நினைவூட்டல் கடிதத்தை வழங்குவதற்காக அங்குள்ள வீடுகளுக்குச் சென்றதாகவும் பிரதேச செயலகத்தினால் நிறுவனங்களுக்கு மாலை 5 மணியின் பின்னர் வீடுகளுக்குச் சென்று பணம் அறவிட வேண்டாம் என்று கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தமது நிறுவனத்தின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக முகாமையாளர் என்ற ரீதியில் தமது நிறுவனத்தில் கடன் பணம் பெற்றுக்கொண்டவர்களுக்கு எதிராக சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் மேலும் தெரிவித்தார். (9-299)

நந்திக்கடலோரத்தில் சேதமடைந்துள்ள உவர்நீர்த் தடுப்பணைகளை புனரமைக்க கோரிக்கை

முல்லைத்தீவு நந்திக்கடல் கரையோரப் பகுதிகளில் முழுமையாகச் சேதமடைந்து காணப்படுகின்ற உவர்நீர்த் தடுப்பணைகளை மீள் அமைத்துத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளில் உள்ள பயிர்ச்செய்கை நிலங்களை பாதுகாக்கும் வகையில் காணப்பட்ட உவர்நீர்த் தடுப்பணைகள் கடந்த 1996 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஏற்பட்ட யுத்தம் காரணமாகவும் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலை காரணமாகவும் மீளவும் 2008 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஏற்பட்ட யுத்தம் காரணமாகவும் கூடுதலான உவர்நீர்ப் தடுப்பணைகள் முழுமையாகவே அழிவடைந்துள்ளன.

குறிப்பாக, நந்திக்கடல் பகுதியின் இரு புறங்களிலும் உள்ள விவசாய நிலங்களைப் பாதுகாக்கும் வகையிலும் நாயாறு, குமுழமுனை போன்ற பகுதிகளிலும் கரையோர விளை நிலங்களைப்பாதுகாக்கும் வகையிலும் அதேபோல கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி போன்ற பகுதிகளிலும் காணப்பட்ட உவர்நீர்த்தடுப் பணைகள் முழுமையாக அழிவடைந்த நிலையில் தற்போது ஒரு பகுதி உவர்நீர்த் தடுப் பணைகள் மாத்திரம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

ஏனைய பகுதிகளில் உவர் நீர்த்தடுப்பணைகள் அமைக்கப்படாது காணப்படுகின்றன.

இதனால் சில பயிர் நிலங்கள் உவர்நிலங்களாக மாற்றமடைந்து காணப்படுகின்றன. ஆகவே சேதமடைந்த உவர்நீர்த் தடுப் பணைகளை மீள அமைத்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

திருக்குறள் தமிழ் இலக்கியம் கலைத்திறன் போட்டிகள்-2050

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் நடத்தும் திருக்குறள் தமிழ் இலக்கியக் கலைத்திறன் போட்டிகள்-2050 இந்த ஆண்டுக்குரிய வேண்டுகைப்படிவங்களும் அறிவுறுத்தல்களும் ஏற்கனவே பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள இயல்பிகந்த அசாதாரண நிலையைக் கருத்தில் கொண்டு 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டியிலும் 2019 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள போட்டியிலும் வெள்ளி விழாவை முன்னிட்டு நடைபெறவுள்ள சிறப்புப் போட்டிகளிலும் மாவட்ட நிலையில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசில்களை சங்க கட்டடத் திறப்பு விழாவிலும் வெள்ளி விழாவிலும் வழங்குவதற்கும் கோட்ட நிலையில் பரிசில் பெறுபவர்களுக்கான பரிசில்களை கொத்தணி அமைப்பு முறையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த ஆண்டு நடைபெறவுள்ள போட்டிக்கான வேண்டுகைகளை 2019.08.05 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஆண்டு இரண்டு தொடக்கம் ஆண்டு 13 வரை கல்வி கற்கும் மாணவர்களை தேர்வில் பங்குபற்ற ஊக்கப்படுத்திய பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றியை தமிழ்ச் சங்கம் தெரிவித்துள்ளது. (9)

வவுனியா தாஸ்நகரில் முன்பள்ளி மாணவர்களின் கல்வித்திறனை அதிகரிக்கும் நோக்குடன், விபுலானந்த முன்பள்ளி கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வடமாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட இருபது இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் கட்டப்பட்ட கட்டடத்தை வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் திறந்து வைத்திருந்தார்.

(படம்:-நெளுக்குளம் செய்தியாளர்)

பாரதம்

பீகார் மாநிலத்தில் தொடரும் கனமழை உயிரிழப்பு 125 ஆக அதிகரிப்பு!

(பீகார்)

பீகார் மாநிலத்தில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 125 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பீகார் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அம் மாநிலத்தில் உள்ள 13 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் அனைத்து ஆறுகளிலும் தண்ணீர் அபாயக் கட்டத்தை தாண்டி பெருக்கெடுத்துள்ளது.

இதேவேளை வெள்ளத்தில் சிக்கிய மக்களை தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மீட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

கார்கில் போர் வெற்றி தினம் அனுஷ்டிப்பு

(டில்லி)

கார்கில் போர் வெற்றி தினமான நேற்று. டில்லியிலுள்ள போர் நினைவுச் சின்னத்தில் இராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் உயிர் நீத்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தினார்.

காஷ்மீர் எல்லையிலுள்ள கார்கில் பகுதியில் கடந்த 1999 ஆம் ஆண்டு ஊடுருவிய பாகிஸ்தான் படையினர், எல்லைக்கட்டுப்பாட்டு கோட்டை தாண்டி சுமார் 200 கி.மீ. வரை ஆக்கிரமித்தனர். இந்திய நிலைகளையும் கைப்பற்றியது. இதையடுத்து இந்திய இராணுவம் மிகப்பெரும் தாக்குதலை நடத்தி பாகிஸ்தான் இராணுவத்தை விரட்டியடித்தது.

இந்தப் போரின்போது வீரமரணம் அடைந்த இந்திய இராணுவ வீரர்களின் தியாகத்தை நினைவுகூரும்வகையில் ஆண்டு தோறும் ஜூலை 26 ஆம் திகதி கார்கில் வெற்றி தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

ஆற்றில் அடித்துச்செல்லப்பட்ட தாய்

கணவன், பிள்ளைகள் கதறல்

மெக்சிக்கோவின் தமோலிபாஸ் பிராந்தியத்திலிருந்த றியோ கிராண்ட் ஆற்றைக் கடந்து அமெரிக்காவிற்கு பிரவேசிக்கும் முயற்சியில் ஈடுபட்ட பெண்ணொருவர் தனது கணவர் மற்றும் பிள்ளைகள் கண்முன்னால் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

சம்பவ தினம் சிறுவர்கள் உள்ளடங்கலாக சுமார் 30 பேர் அந்த ஆற்றைக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்டபோதே இந்த விபரீத சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது தனது தாய் ஆற்றில் அடித்துச் செல்வதைக் கண்ட அவரது மகன்மாரில் ஒரு சிறுவன் ஆற்றில் தன்னைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த தந்தையின் கழுத்தை இறுகப்பிடித்துக் கொண்டு கதறியழும் காணொலி சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் மெக்சிக்கோ படையினரால் குறிப்பிட்ட தந்தை, இரு மகன்மார் உள்ளடங்கலாக அனைத்துக் குடியேற்றவாசிகளும் பாதுகாப்பாக மீட்கப்பட்டு கரைக்கு அழைத்து வரப்பட்டனர். (ஜ)

நீர்மூழ்கிக்கப்பல்களை தாக்கி அழிக்கும் ஹெலிகொப்டர்களை கொள்வனவு செய்யும் இந்தியா

(டில்லி)

நீர்மூழ்கிக் கப்பல்களை தாக்கி அழிக்கும் 24 ரோமியோ சிஹாக் ஹெலிகொப்டர்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக இந்தியக் கடற்படைத் தளபதி கரண்பீர் சிங் தெரிவித்துள்ளார்.

சீனா-பாகிஸ்தான் அச்சுறுத்தலை சமாளிக்க இவ்வகையான நவீன ஹெலிகொப்டர்கள் தேவைப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்து தெரிவித்த அவர்,

அமெரிக்காவிடம் இருந்து இந்தியக் கடற்படைக்கு 17 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் சுமார் 24 ஹெலிகொப்டர்களைக் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் இறுதியில் இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் எனத் தெரிவித்தார்.

இந்தியக் கடற்படைக்கு அதி நவீன ஹெலிகொப்டர்கள் தேவைப்படுவதாக பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

குறித்த பரிந்துரைக்கு ஏற்ப எதிர்வரும் 2022 ஆம் ஆண்டுக்குள் கடற்படையின் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்ய மத்திய அரசு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

லிபிய அகதிகளின் படகு க

150 பேர் கடலில் மூழ்கி

(திரிபோலி)

லிபியாவில் இருந்து ஐரோப்பாவிற்கு சட்டவிரோதமாக சென்ற அகதிகளின் படகு கவிழ்ந்ததில் 150 பேர் கடலில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு அந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்த கடாபியின் ஆட்சி முற்றாக ஒழித்த பின்னர் அங்கு அதிகாரப் போர் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதுடன் அங்கு குழுமோதல்களும் இடம்பெற்று வருவதுடன் இதில் சிக்கி பல்லாயிரக்காணக்கான பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர்.

இவ்வாறு ஏற்படும் மோதல்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அந்நாட்டு மக்கள் வேறு இடங்களை நோக்கி கடல் மார்க்கமாகச் செல்ல முயற்சிக்கையில் இவ்வாறான உயிரிழப்புகள் பெருமளவில் ஏற்படுகின்றதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்காவிலிருந்து நாடு தி
உலகக்கிண்ணத்தை வென்றது

பாக்.பிரதமர் இம்ரான் நெ

(இஸ்லாமாபாத்)

அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுவிட்டு தாய்நாடு திரும்பிய பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான் கான் அங்கு அவருக்கு வழங்கப்பட்ட வரவேற்பையிட்டு தான் உலகக் கிண்ணத்தை வென்றதைப்போன்று உள்ளது என நெகிழ்ச்சி அடைந்துள்ளார்.

அமெரிக்காவில் 16 வருடங்களுக்கு பிறகு மீண்டும் மரண தண்டனைத்தீர்மானம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் 16 வருட இடைவெளிக்குப் பிறகு மரண தண்டனை நிறைவேற்றப்பட உள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன. இதுதொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அமெரிக்க சட்டமா அதிபர் வில்லியம் பார், ஏற்கனவே மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள 5 கைதிகளுக்கு தண்டனையை நிறைவேற்றுமாறு சிறைச்சாலை அதிகாரிகளை கேட்டுக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

விரைவில் மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ள 5 கைதிகளும் கொலை, பாலியல் வன்முறை உள்ளிட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று வில்லியம் பார் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். 5 கைதிகளுக்காக மரண தண்டனை முறையே எதிர்வரும் டிசெம்பர் மற்றும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நிறைவேற்றுவதற்கு திகதி குறிக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (ஜ)

படகு கவிழ்ந்தது; 13 பேர் பலி

மியன்மார் நாட்டில் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள மண்டலி நகரம் ஜீடாவ் என்ற அணை அமைந்துள்ளது.

இந்த அணையில் படகு ஒன்றில் 25 யாத்திரிகர்கள் பயணித்தனர். அவர்கள் அனைவரும் நியாங் ஒஹாக் என்ற கிராமத்தில் உள்ள மடாலயத்திற்கு செல்வதற்காகவே பயணித்துக்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த படகு அணையின் மையப்பகுதியை கடந்த போது எதிர்பாராத விதமாக தண்ணீருக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இது குறித்து தகவலறிந்த மீட்புக் குழுவினர் அணைப்பகுதிக்கு விரைந்து தண்ணீரில் மூழ்கிய 11 பேரை உயிருடன் மீட்டனர்.

ஆனாலும் படகு கவிழ்ந்த விபத்தில் 13 பயணிகள் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். (ஜ)

வெளிநாடு

...கு கவிழ்ந்து விபத்து ...்கி பரிதாபமாக பலி!

இவ்வாறு லிபியாவில் இருந்து மக்கள் ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் தேடி சட்ட விரோதமாக கடலில் ஆபத்தான பயணத்தை மேற்கொள்கின்றனர். இந்நிலையில், லிபியா நாட்டின் அல் கோம்ஸ் நகரில் இருந்து படகு ஒன்றில் 300 இற்கும் மேற்பட்ட அகதிகள் ஐரோப்பா நோக்கிப் பயணித்தனர்.

லிபியாவிலிருந்து 120 கிலோ மீற்றர் தொலைவில் மத்திய தரைகடல் பகுதியில் படகு சென்று கொண்டிருந்தபோது திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

படகு கடலில் மூழ்கியதில் 150 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 150 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டுச் செய்திகள் தெரிவித்துள்ளன. உயிரிழந்தவர்களின் உடல்களைத் தேடும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் அந்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ)

...ு திரும்பிய போது வரவேற்பு; ...ன்றதுபோல் உணர்கின்றேன்

...ா நெகிழ்ச்சி

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்காவுக்கு மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் விஜயத்தை நிறைவு செய்த பின்னர் நேற்று முன்தினம் தாய்நாடு திரும்பினார்.

இந்நிலையில் பாகிஸ்தானில் அவருக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே வழங்கப்பட்ட சிறப்பான வரவேற்பால் பூரிப்படைந்த இம்ரான் கான், நீங்கள் அளிக்கும் வரவேற்பை பார்த்தபோது, நான் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்து வந்தது போல தெரியவில்லை.

மாறாக உலகக்கிண்ணத்தை கைப்பற்றிவிட்டு தாய்நாடு திரும்பிய உணர்வு ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

கர்நாடகாவில் ஜனாதிபதியின் ஆட்சியை அமுல்படுத்தலாம்

குமாரசாமி கூறுகிறார்

(கர்நாடகா)

கர்நாடகாவில் தற்போதைய சூழலில் யாராலும் நிலையான ஆட்சியைத் தர முடியாது என்று அம்மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் குமாரசாமி தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போதுள்ள சூழ்நிலையில் கர்நாடகாவில் ஜனாதிபதியின் ஆட்சியை அமுல்படுத்தலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

பெங்களூரில் செய்தியாளர்களை சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "நான் சட்டசபையில் மக்கள் நம்பிக்கையை இழந்து இருக்கலாம்.

அடுத்ததாக எங்கள் கட்சியை அடிமட்ட அளவில் இருந்து வளர்ப்பது தான் எனது ஒரே இலட்சியம்.

இதற்கான பயணத்தை ஆரம்பிக்க உள்ளேன். அதன்படி மக்களின் நம்பிக்கையை நாங்கள் பெறுவோம்.

கர்நாடகாவில் நிலவும் இன்றைய அரசியல் சூழ்நிலையில் எடியூரப்பா ஆட்சி அமைத்தாலும் அது நீடிக்காது.

அவர்கள் ஆட்சியைக் கொண்டு செல்வதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படும்.

இதைத் தவிர்க்க கர்நாடகாவில் ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்துவது நல்லது. இது, எனது தனிப்பட்ட கருத்து" என மேலும் தெரிவித்தார். (ஐ)

ஆப்கான் தலைநகரை உலுக்கிய தொடர் குண்டுத்தாக்குதல்கள்

- 15 பேர் உயிரிழப்பு
- 40 பேர் படுகாயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் பெற்றோலியம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சின் அதிகாரிகள் சென்ற பேருந்து மீது நடத்தப்பட்ட தொடர் குண்டுத்தாக்குதலில் 15 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தொடர் குண்டுத்தாக்குதல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காபூலின் கிழக்கு பகுதியில் இடம்பெற்றதாக அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

காபூலின் கிழக்குப் பகுதியில் ஊழியர்கள் சென்று கொண்டிருந்த பேருந்து மீது வெடிகுண்டுகள் நிரப்பிய மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலை குண்டுதாரி குண்டை வெடிக்க செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அங்கு மீண்டும் அடுத்தடுத்து இரு குண்டுகள் வெடித்தமையால் 15 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளதுடன் 40 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு அருகிலுள்ள வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த தொடர் குண்டுத்தாக்குதலுக்கு எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஐ.எஸ். ஆதரவாளர்களாக செயற்பட்டவர்களுக்கு நாடு திரும்புவதற்கு தடைவிதிக்கும் சட்டமூலம்

ஆஸி. நாடாளுமன்றில் நிறைவேற்றம்

(சிட்னி)

ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயற்பட்ட அவுஸ்திரேலியர்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கு தடை விதிக்கும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இதுகுறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், அதற்கு அவுஸ்திரேலிய நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக, உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான பெண்கள் சிரியா சென்று அங்கு பயங்கரவாதிகளை திருமணம் செய்து கொள்கின்றனர்.

தற்போது ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு தோற்கடிக்கப்பட்ட நிலையில், குறித்த பெண்களும் அவர்களின் குழந்தைகளும் சிரியாவிலுள்ள தடுப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சுமார் 50 பேர் அவுஸ்திரேலியர்கள் ஆவர்.

இந் நிலையில், ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயற்பட்ட பெண்களை மீண்டும் நாட்டுக்குள் அனுமதித்தால், அது நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் எனப் பல்வேறு தரப்பினரும் அச்சம் வெளியிட்டு வந்தனர்.

இதையடுத்து, சிரிய அகதிகள் முகாம்களிலிருந்து பெண்கள் மற்றும் குழந்தைகளை திரும்பப் பெறுவதை 2 ஆண்டுகளுக்கு நிறுத்திவைப்பதற்கான சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஐ)

சாதனை படைத்த "ஷூ"

(நியூயோர்க்)

உலக வரலாற்றிலேயே சூ.3 கோடிக்கு ஏலம் போன 'ஷூ' என்ற சாதனையை 'மூன் ஷூ' படைத்துள்ளது.

விளையாட்டு வீரர்களுக்கான காலணிகளை (ஷூ) சிறப்பான முறையில் தயாரித்து வழங்குவதில் அமெரிக்காவைச் சேர்ந்த 'நைக்' நிறுவனம் உலகின் முன்னணி நிறுவனமாக விளங்கி வருகிறது.

இந்த நிறுவனத்தை நிறுவியவரும், தடகளப் பயிற்சியாளருமான பில் போவர்மேன் கடந்த 1972 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியின் போது தடகள வீரர்களுக்காக 'ஷூ' ஒன்றை வடிவமைத்தார். அது 'மூன் ஷூ' என்று அழைக்கப்பட்டது.

மொத்தம் 12 சோடி மூன் ஷூக்களை அப்போது அவர் தயாரித்து வழங்கினார். இந் நிலையில், பில் போவர் மேன் தயாரித்த ஒரு சோடி 'மூன் ஷூ' அண்மையில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஏலம் விடப்பட்டது.

அப்போது கனடாவைச் சேர்ந்த மைல்ஸ் நடால் என்பவர் அந்த 'ஷூ'வை 4 இலட்சத்து 37 ஆயிரத்து 500 அமெரிக்க டொலருக்கு (இந்திய மதிப்பில் சுமார் சூ.3 கோடியே ஒரு இலட்சத்து 80 ஆயிரம்) ஏலத்தில் எடுத்தார். (ஐ)

மகிந்த மற்றும் கோத்தபாய ஆகியோரே நாட்டை ஆட்சி செய்யத் தகுதியானவர்கள்

எஸ்.எம்.சந்திரசேன சுட்டிக்காட்டு

(மொனராகலை)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரே இந்த நாட்டை ஆட்சி செய்யத் தகுதியானவர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன சுட்டிக்காட்டியுள்ளார்.

மொனராகலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு

ஒன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயங்கரவாதம் தலைதூக்குவதைத் தடுக்கக்கூடிய ஒரே தலைவர் கோத்தபாய ராஜபக்ஷ எனவும், இதனால் அவரை நாட்டின் தலைவராக்கி பார்க்க மக்கள் விரும்புகின்றார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கோத்தபாய ராஜபக்ஷ நாட்டின் ஜனாதிபதியாகவும், மகிந்த ராஜபக்ஷ பிரதமராகவும் பொறுப்பேற்றுக்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்புவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டை அபிவிருத்தி செய்த தலைவர்கள் இருவரும் மீளவும் இன்னும் சில மாதங்களில் நாட்டை ஆட்சி செய்வுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ஜ)

வலைத்தளங்களின் தலைவர்களுக்கு விசாரணை

வெறுக்கத்தக்கதும் தவறானதுமான கருத்துகளை சமூக வலைத்தளங்களினூடாக வெளிப்படுத்துவதைக் கட்டுப் படுத்துவது குறித்து கண்டறி வதற்காகவும் அவற்றைக் கண்காணிப்பதற்காகவும் உரிய தரப்பினரை அழைத்து விசாரணை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஊழல் எதிர்ப்பு தொடர்பான நாடாளுமன்றத்தின் சட்ட விவகாரங்கள் மற்றும் ஊடக ஒழுங்கு முறை தொடர்பான துறைமேற் பார்வைக் குழுவே இந்த விசாரணைகளை நடத்தத் தீர்மானித்துள்ளது. (ஜ)

டிபென்டர் வாகனத்தில் துப்பாக்கி பறிமுதல்

(கொழும்பு)

வீரகொட்டிய பகுதியில் பொலிஸாரின் வீதித் தடையில் டிபென்டர் வாகனம் ஒன்றை சோதனை செய்த போது அதில் இருந்து தோட்டாக்களுடன் கூடிய வெளிநாட்டுத் துப்பாக்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தங்கல்ல பொலிஸார் வீரகொட்டிய, யக்கஸ்முல்ல பகுதியில் உள்ள வீதித் தடையில் வைத்து நேற்று முன்தினம் மாலை 4.45 மணியளவில் குறித்த டிபென்டர் வாகனத்தை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது குறித்த வாகனத்தில் இருந்து இரு தோட்டாக்களுடன் கூடிய வெளிநாட்டு துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த துப்பாக்கியை கைப்பற்றிய போது டிபென்டர் வாகனத்துடன் சாரதி அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் 36 ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபகர் குட்டிமணி மற்றும் தளபதி தங்கதுரை உட்பட 53 பேர் படுகொலை செய்யப்பட்ட வெலிக்கடைப் படுகொலையின் 36ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் தமிழீழ விடுதலை இயக்கத்தின் மட்டக்களப்பு காரியாலயத்தில் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் பொருளாளருமான கோவிந்தம் கருணாகரம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் உபதலைவரும், முன்னாள் கிழக்கு மாகாணசபை உபதவிசாளருமான இந்திரகுமார் பிரசன்னா, மட்டக்களப்பு மாநகரசபையின் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மண்முனை தென்எருவில் பற்றுப் பிரதேசசபைத் தவிசாளர் யோகநாதன், போரதீவுப் பற்றுப் பிரதேசபைத் தவிசாளர் ரஜனி உட்பட உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், கட்சியின் மூத்த உறுப்பினர்கள், இளைஞர் அணி உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

1983ஆம் ஆண்டு ஜூலை 25 தொடக்கம் 27ஆம் திகதி காலப்பகுதிகளில் இடம்பெற்ற வெலிக்கடைச் சிறைச்சாலைக் கலவரத்தின் போது குட்டிமணி தங்கதுரை உட்பட போராளிகள், பொதுமக்கள் என 53 பேர் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டார்கள். அத்தினத்தை தமிழீழ விடுதலை இயக்கத்தினால் தமிழ்த் தேசிய வீரர்கள் தினமாக வருடாவருடம் அனுஷ்டித்து அஞ்சலி செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

வாழும் முறை

"நல்லதற்கு இது காலம் இல்லை சேர்" என்று சொல்லி அலுத்துக் கொண்டார் ஒருவர். "ஏங்க அப்படி சொல்றீங்க?" என்று கேட்டார் இன்னொருத்தர்.

நாம் பணிவாக நடந்து கொண்டால் அதை மற்றவர்கள் நம்முடைய பலவீனமாக நினைத்து விடுவார்கள் சேர். நடைமுறையிலே அது மிகவும் கஷ்டமாக இருக்கின்றது என்றார் இவர்.

இவர் இப்படி சொல்லுவதிலே ஒன்றும் தப்பு இல்லை. உங்களிலே பல பேருக்குக் கூட அப்படிப்பட்ட அனுபவங்கள் இருக்கலாம்.

சரி அப்படி என்றால் இந்த உலகத்திலே நாம் எப்படி நடந்து கொள்வது?

இந்த கேள்விக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் என்ன பதில் சொல்கின்றார் எனப் பார்க்கலாம். அவர் சொல்லியிருக்கின்ற ஒரு கதையை கேளுங்கள். அதிலே இதற்குப் பதில் இருக்கின்றது. ஒரு நாள் ஒரு பிரம்மச்சாரி புல்வெளி வழியாக நடந்து போய்க் கொண்டு இருந்தார். அவரைப் பார்த்ததும் அங்கே மாடு மேய்த்துக் கொண்டிருந்த சின்ன பையன்கள் சில பேர் ஓடி வந்தார்கள்.

சுவாமி அந்தப் பக்கம் போகாதீர்கள்! அங்கே ஒரு விசப்பாம்பு! இருக்கின்றது! போறவர்கள் வருகின்றவர்களை கடித்துவிடும் என்றார்கள்.

பாம்புதானே! பரவாயில்லை! எனக்கு சில மந்திரம் தெரியும்! அதனால் பயமில்லை! என்று சொல்லிவிட்டு அவர் நேரே சென்றார்.

அவர் என்ன ஆபத்தை விலை கொடுத்து வாங்குபவராக உள்ளார் என்று நினைத்து அந்தப் பையன்கள் தூரத்தில் நின்று கொண்டார்கள்.

இவர் மட்டும் போய்க் கொண்டு இருந்தார். கொஞ்ச தூரம் போயிருப்பார். பாம்பு அவரை நோக்கி சீறிக் கொண்டு வந்து படம் எடுத்தது. அதைப் பார்த்து இவர் ஒரு மந்திரம் சொன்னார். அவ்வளவுதான்! இந்த மந்திரத்தினுடைய மகிமை, பாம்பிடம் இருந்த கெட்ட குணம் பூராகவும் போய்விட்டது. அது ஒரு மண்புழு மாதிரி இவர் காலடியிலே வந்து படுத்துக்கொண்டது. இவர் அதுக்கு உபதேசம் செய்தார்.

"நீ ஏன் இப்படி எல்லாருக்கும் கெடுதல் செய்கிறாய்? நான் ஒரு மந்திரம் சொல்லித் தருகிறேன். அதை நீ எப்பவும் சொல்லிக் கொண்டு இரு. உன்னிடம் இருக்கின்ற கெட்ட குணம் விலகிப் போய்விடும். கடைசியிலே கடவுள் தரிசனம் உனக்குக் கிடைக்கும்" என்றார்.

பாம்பும் 'சரி' என்று சொல்லி விட்டு அதை கற்றுக் கொண்டது. உபதேசம் செய்துவிட்டு அந்தப் பெரியவர் போய்விட்டார்.

அன்றையிலிருந்து பாம்பு தன்னிடம் இருந்த கெட்ட குணத்தையெல்லாம்விட்டுவிட்டது. இப்எல்லாம் அதுயாரையும்கடிக்கிறதில்லை.

இது தெரிந்தவுடனே அங்கே இருந்த மாடு மேய்க்கிற பையன்களுக்கு துணிச்சல் வந்து விட்டது. சும்மா இருப்பார்களா?

அந்தப் பாம்பைக் கண்டா கல்லையெடுத்து எறியுறது, குச்சியை எடுத்து வீசிறது. எல்லாத் துன்பத்தையும் அந்தப் பாம்பு பொறுமையாக சகித்துக் கொண்டிருந்தது. அதுக்கு இப்போ கோபமே வருவதில்லை.

ஒரு பையனுக்கு இதைப்பார்த்ததும் சும்மா இருக்கமுடியவில்லை. அருகில் போனான். அந்தப் பாம்பினுடைய வாலைப் பிடித்துத் தூக்கினான். கரகரன்னு தலைக்கு மேலே சுத்தினான். ஓங்கி தரையிலே வீசினான். அந்த பாம்பு மூர்ச்சையாகிவிட்டது.

"சரி அவ்வளவுதான்! ஆட்டம் குளோஸ்" என்று நினைத்துக் கொண்டு அந்தப் பையன்கள் போயிட்டார்கள்..

அந்தப் பாம்பு ரொம்ப சிரமப்பட்டு வளைக்குள்ளே போயிட்டுது. பகலிலே வெளியில் வருகிறதே இல்லை. இலை, சருகு தானா விழுகிற பழங்கள் இதை சாப்பிட்டே காலம் தள்ளிக்கொண்டிருந்தது.

பாம்பு ரொம்பவும் மெலிஞ்சு போய்விட்டது. எலும்பும் தோலுமாக ஆகிவிட்டது. இருந்தாலும் மற்றவர்களுக்கு எந்தக் கெடுதலும் செய்யிறதில்லை. இப்படியே வாழ்ந்து கொண்டிருந்தது.

ஒரு வருடத்துக்கு பின்பு திரும்பவும் அந்தப் பெரியவர் அந்த வழியாக வந்தார். பாம்பைப் பார்த்தார். "என்ன சௌக்கியமா?" என்றார்.

"ஏதோ உங்க புண்ணியத்திலே ரொம்ப சௌக்கியமா இருக்கிறேன்" என்றது பாம்பு.

"என்ன இப்படி ஒரேயடியா மெலிந்து போய்விட்டாய்" என்றார்.

"இப்ப இலை-பழம் மட்டும் தானே சாப்பிடுறேன். அதனாலே அப்படி இருக்கலாம்" என்றது.

"பையன்கள் உனக்கு தொந்தரவு செய்யவில்லையா? என்று கேட்டார்.

"அறியாத பிள்ளைகள் ஏதோ தெரியாத்தனமாக அப்படிச் செய்து விட்டார்கள்" என்றது. பாம்புக்கு அந்த அளவுக்குப் பக்குவம் வந்து விட்டுது. அப்பத்தான் அந்தப் பெரியவர் சொல்கிறார், "யாரையும் கடிக்க வேண்டாம் என்று தானே உன்னிடம் சொன்னேன். சீறிப் பயமுறுத்த வேண்டாம் என்று சொல்லலையே? யாராவது தொந்தரவு செய்ய வந்தா அவர்களை சீறி நீ உன்னை பாதுகாத்துக்க வேண்டாமா?" என்றார். இந்த கதை மூலமாக ஸ்ரீராமகிருஷ்ணர் என்ன சொல்கிறார் என்றால்,

"நீ மற்றவர்களுக்கு கெடுதல் செய்யாதே! ஆனால் நீ இந்த உலகத்திலே வாழுறபோது மற்றவர்களுக்கு உன் மேலே அச்சமும் மரியாதையும் ஏற்படுகிற வகையிலே நடந்துகொள்" என்கிறார்.

அதாவது பாம்பு பாஷையிலே சொல்லப் போனால் படம் எடுக்கலாம்- ஆனால் கொத்தக் கூடாது. இந்தத் தகவலைக் கேட்டிட்டு ஒருத்தர் என்னிடம் வந்தார். அவர் ஒரு சினிமா டைரக்டர்.

சேர்! பாம்புக்கும் எனக்கும் ஒரு ஒற்றுமை உண்டு என்றார்.

"என்ன?" என்று கேட்டேன்!

"பாம்பு படம் எடுத்தாலும் பார்க்கிறவர்கள் ஓடிப் போகிறார்கள். நான் படம் எடுத்தாலும் பார்க்கிறவர்கள் ஓடிப் போகிறார்கள்" என்றார்.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் விபத்துக்களை தடுக்க உடனடி நடவடிக்கை அவசியம்

டக்ளஸ் எம்.பி



(கொழும்பு)

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள் கருதி உடனடியாக முன்னெடுக்கப்படக்கூடிய ஏற்பாடுகள் ஏதேனும் உள்ளனவா? என நாடாளுமன்றில் நடைபெற்ற 27/2 கேள்வி நேரத்தின்போது போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவிடம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் சுமார் 685 பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் இருக்கின்றதாகக் கூறப்படுகின்ற நிலையில், இவற்றில் அதிகளவிலான பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் வடக்கு மாகாணத்திற்கான ரயில் பாதையிலேயே அமையப் பெற்றிருப்பதாகவும் தெரிய வருகின்றது. இந்நிலையில், வடக்கு மாகாணம் நோக்கியதான ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இன்று வரையில் தொடர்ந்தும் மிக அதிகளவிலான விபத்துகள் ஏற்பட்டு, பல மனித உயிர்கள் பலியாகி வருகின்றன.

மேற்படி பாதுகாப்பற்ற ரயில் கடவைக் காப்பாளர்களாக வடக்கு மாகாணத்தில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தால் உள்வாங்கப்பட்டுள்ளவர்கள் ஊதியப் பிரச்சினை, தொழில் சார் பிரச்சினை மற்றும் அடிப்படை வசதிகள் இன்மை போன்ற காரணங்களால்பாதிக்கப்பட்டிருந்த நிலையில், அவர்களில் பலரும் இன்று அக்கடமைகளைவிட்டு விலக்கியுள்ளதாகவும் தெரிய வருகின்றது. தொடர்ந்து பணியாற்றி வருகின்றவர்களும் மேற்படி பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையிலேயே பாரிய இடர்பாடுகளுக்கு மத்தியில் பணியில் ஈடுபட வேண்டிய நிலையில் உள்ளனர் எனவும் தெரிய வருகின்றது.

எனவே, மேற்படி பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் ஏற்படக்கூடிய விபத்துக்களைத் தவிர்க்கும் வகையில் ஏற்பாடொன்று மிகவும் விரைந்து முன்னெடுக்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகவுள்ளது. இவ்விடயம் தொடர்பில் இதற்கு முன்பிருந்த போக்குவரத்து அமைச்சரின் அவதானத்திற்கு ஏற்கனவே கொண்டு வந்திருந்தபோது, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறப்பட்டபோதிலும் இதுவரையில் இது தொடர்பில் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த வகையில், மேற்படி பாதுகாப்பற்ற ரயில் கடவைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள் கருதி உடனடியாக முன்னெடுக்கப்படக்கூடிய ஏற்பாடுகள் ஏதேனும் உள்ளனவா? பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் கடவைக் காப்பாளர்களாக தற்போது கடமையாற்றி வருபவர்களுக்கான ஊதிய உயர்வு, தொழில் தகுதி, அடிப்படை வசதிகள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளனவா? குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாண ரயில் கடவைக் காப்பாளர்களது தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பில் இதுவரையில் எடுக்கப்பட்டுள்ள தீர்வுகள் என்ன? கடவைக் காப்பாளர்கள் பற்றாக்குறை நிலவுகின்றதெனில், தற்போது தொழில் வாய்ப்புகளற்று இருக்கின்ற புனர்வாழ்வு பெற்றவர்களை உரிய ஊதிய அடிப்படையில் வடக்கு மாகாணத்திற்கான பாதுகாப்பற்ற ரயில் கடவைக்காப்புப் பணிகளில் புகையிரதத் திணைக்களத்தின் ஊடாக இணைத்துக் கொள்ள முடியுமா? என மேலும் கேள்வியெழுப்பியிருந்தார். (ஒ)

கிளிநொச்சி கோணாவில் காந்தி ஆரம்பப் பாடசாலையின் மாணவர்களின் மாதிரிச் சந்தை கடந்த வாரம் இடம் பெற்றது. (படம்:-அக்கராயன் செய்தியாளர்)

தாயகம் சிறப்பிதழ் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 3 ஆவது அனைத்திலங்கை மாநாட்டையொட்டி வெளியிடப்பட்ட தாயகம் சஞ்சிகையின் சிறப்பிதழ் அறிமுக நிகழ்வு நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் காப்பாளரும் கவிஞருமான சட்டத்தரணி சோ.தேவராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் மதிப்பீட்டுரைகளைப் பிரபல எழுத்தாளரும் பொறியியலாளருமான ஐ.சாந்தனும் ஆய்வாளர்களான சி.ரமேஸ் மற்றும் ச.சத்தியதேவன் ஆகியோரும் ஏற்புரையினைத் தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க.தணிகாசலமும் வழங்குவர். (ஜ)

கழிவுப்பொருட்களை இறக்குமதி செய்தோருக்கு கடும் தண்டனை

மங்கள எச்சரிக்கை

(கொழும்பு)

இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு கழிவுகளை இறக்குமதி செய்வது தொடர்பான விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், இறக்குமதிக்குக் காரணமானவர்களுக்கு சுங்கச் சட்டங்களின் கீழ் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுமென நிதியமைச்சர் மங்கள சமரவீர நேற்று தெரிவித்தார்.

அத்துடன், இது குறித்து கண்டறிவதற்காக அடுத்த வாரத்தில் அமைச்சரவைக் குழுவொன்றும் நியமிக்கப்படுமென அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஜ)

மகிந்தானவுக்கு எதிராக வழக்குப்பதிவு!

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மகிந்தானந்த அளுத்கமகே விளையாட்டுத்துறை அமைச்சராகவிருந்த காலத்தில் கரம் போர்ட் விநியோக நடவடிக்கையில் இடம்பெற்ற மோசடி தொடர்பாகவே இவருக்கு எதிராக இவ்வாறு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஜ)

குளியாப்பிட்டியில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பரிதாபமாக உயிரிழப்பு

குளியாப்பிட்டி)

குளியாப்பிட்டி-எபலதெனிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர்பரிதாபமாகஉயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், கொழுகொமுவ - எபலதெனியப் பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய சமன் சந்தன எனப்படும் பெலெக் சமன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் இரவு 8.10 மணியளவில், வானில் வந்த சிலரால் மோட்டார் சைக்கிளில் சென்றவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது படுகாயமடைந்தவரை குளியாப்பிட்டி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஜ)

பரீட்சை வினாத்தாள்களை திருடிய 2 மாணவர்கள் கைது

(ஹற்றன்)

ஹற்றன் கல்வி வலயத்திற்கு உட்பட்ட மஸ்கெலியா பேயாலோன் தமிழ் வித்தியாலயத்தில் பரீட்சை வினாத் தாள்களை திருடிய 2 மாணவர்களை மஸ்கெலியா பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவித்தனர்.

2 ஆம் தவணைப் பரீட்சைக்காக மத்திய மாகாணத்தில் இருந்து அச்சிடப்பட்டு அனுப்பப்பட்ட பரீட்சை வினாத்தாள்கள் பேயாலோன் தமிழ் வித்தியாலயத்தின் அதிபரின் காரியாலயத்தில் இருந்தது.

வினாத் தாள்கள் பொதி செய்யப்பட்டு வைத்திருந்த பொதி, உடைக்கப்பட்டு இருந்ததை அவதானித்த அதிபர், சம்பவம் தொடர்பில் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை நேற்று முன்தினம் செய்துள்ளார்.

முறைப்பாட்டிற்கு அமைவாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், குறித்த பாடசாலையின் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி பயிலும் 2 மாணவர்களை கைது செய்துள்ளனர்.

பாடசாலையின் அதிபரின் காரியாலயத்தின் பின்புறத்தில் உள்ள 3 ஜன்னல்களும் திறந்து இருந்ததாகவும் ஜன்னல் வழியாக சென்று குறித்த காரியாலயத்தில் பொதிசெய்யப்பட்டுவைக்கப்பட்டிருந்த விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலப் பாடத்திற்கான வினாத் தாள்களை குறித்த 2 மாணவர்களும் திருடியதாகவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (ஜ)

அராஜக ஆட்சியாளர்கள் நாட்டில் இன்னும் உள்ளனர்

மஹ்ரூப் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

காட்டு தர்பார் மூலம் நீதித்துறையைக் கட்டுப்படுத்திய அராஜக ஆட்சிக்காலம் மலையேறிவிட்ட போதும் அதன் ஆதரவாளர்கள் இன்னும் நீதிமன்றங்கள் தம் விருப்பப்படி இயங்கவேண்டும், தீர்ப்புக்கூற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் சுட்டிக்காட்டியுள்ளார்.

வைத்தியர் ஷாபி சஹாப்தீன் பிணையில் விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் நேற்று கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைத்தியர் ஷாபி சஹாப்தீன் பிணையில் விடுதலை செய்யப்பட்டமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தத் தீர்ப்பு அவருக்குரியது மட்டுமல்ல. நீதி, நியாயத்தை யாசிக்கும் இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜைகளுக்கும் உரியது.

அநியாயமாக சிறையிலிடப்பட்ட போதும் உண்மையே இறுதியில் வெற்றி பெறும் என்பதை இந்தத் தீர்ப்பும் இனிவரும் நீதிமன்றத் தீர்ப்புகளும் உறுதி செய்யும் என்ற அசையாத நம்பிக்கை எமக்கிருக்கின்றது.

அது சாத்தியமில்லாத போது விலைபோகும் ஊடகங்களின் முன்னால் இனவாதத்தைத் தக்கி அரசாங்கத்தையும் சீ.ஐ.டி. மற்றும் பொலிஸ் தரப்பையும் ஏன் நீதித்துறையையும் கூட கேவலப்படுத்தி விமர்சிக்கின்றனர். நாட்டின் பாதுகாப்புக்கு சவால் விடுகின்றனர்.

இந்த நாட்டில் நீதித்துறையை சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் இயங்க வழிசெய்த ஐக்கிய தேசிய முன்னணித்தலைமையிலான நல்லாட்சியின் பலனாகவே இந்தத் தீர்ப்பையும் இதற்கு முன்னரான பல தீர்ப்புகளையும் நாம் நியாயத்தின் சார்பாக பெற்றுக்கொண்டோம் என்பதை மறக்கலாகாது. அதனால் தான் நீதித்துறையை நம் மக்கள் நம்பிக்கையோடு நோக்குகின்றனர்.

இந்த நாட்டின் பிரஜைகள் அனைவரும்சமமாக மதிக்கப்படும், சிவில் சட்டங்களால் சிறப்பாக ஆளப்படும் இனவாதம் அற்ற புதுயுகம் நோக்கிப் புறப்படுவோம்.

டாக்டர் ஷாபி சஹாப்தீனுக்கு முழுமையான நீதி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். அவருக்கான நட்டஈடும் கிடைக்க நாம் ஒத்துழைப்போம்.

அவரது விடுதலைக்காக உழைத்த சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், மனிதநேய செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன் எனவும் தெரிவித்துள்ளார். (ஜ)

தொடர்மாடி வீடுகளின் (Condominium) கூட்டுச் சொத்துரிமையும் அதன் பராமரிப்பும்

11

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

இதன் காரணமாக ஒரு சில மாடிவீடுகளில் காணப்பட்ட புதைவாயில் குழாய் மூடிகள் மீதும் அனுமதியற்ற நிர்மாணங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு மின் மாற்றி, கட்டடங்களுக்கான காற்றோற்ற வழிகள், அவசர கதவுகள் மற்றும் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற நடைக் கூடங்களை ஊடறுத்து இந்த நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறான அனுமதியற்ற நிர்மாணங்களால் அவற்றைப் பராமரிப்பதற்கான வழிகள் அற்றுப் போயுள்ளதன் காரணமாகவும் குடிநீர்க் குழாய்கள் மற்றும் கழிவுநீரை வெளியேற்றும் குழாய்களிலிருந்து நீர் கசிவதாலும் கட்டடங்கள் குடியிருப்பதற்குப் பொருத்தமற்ற வகையில் வேகமாக சிதிலமடைந்து வருகின்றன.

இந்நிலை புனர்நிர்மாணப் பணிகளுக்கு பெரும் தடையாக உள்ளது. எனவே, இவ்வாறான அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கான சட்ட ரீதியான அதிகாரத்தைக் கொண்டுள்ள கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபை அதன் அதிகாரத்தைப் பயன்படுத்தி அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றி தொடர்மாடி வீடுகளைப் புனர்நிர்மாணம் செய்வதற்கான வாய்ப்பை ஓரளவு ஏற்படுத்தியுள்ளது.

மாடிவீடுகளில் ஒரு சிலரினால் தேவையற்ற விதத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத நிர்மாணங்கள் காரணமாக தொடர்மாடி வீடுகளைப் புனரமைப்பதற்கான வாய்ப்பு அற்றுப்போகிறது. எனவே, உங்கள் தொடர்மாடி வீட்டில் நிர்மாணிக்கப்படும் அனுமதியற்ற நிர்மாணங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.



தொடர்மாடி வீடுகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டடங்கள்

புனர்நிர்மாணப் பணிகளின் பின்னர் அங்கு குடியிருப்பவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டதும் உரிய முறையில் செயற்படுவதுமான முகாமைத்துவக்கழகம் / கூட்டுத்தாபனம் குழுக்களை அமைத்து கட்டடத்தினதும் பொது அம்சங்களினதும் பராமரிப்பினை மேற்கொள்ளும் பொறுப்பு கூட்டுரிமை ஆதன உரிமையாளர்களுக்குரியது / உங்களுக்குரியது. இதன்மூலம் மிக வெற்றிகரமான தொடர்மாடி வீட்டு வாழ்க்கை முறையில் பிரவேசிக்க உங்களுக்கு வாய்ப்பு ஏற்படும். இதற்கு ஒத்துழைப்பு வழங்க கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபை எப்போதும் தயார் நிலையில் உள்ளது. இதனுடன் தொடர்புடைய எந்தவொரு பிரச்சினைக்கும் கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபை மூலம் தீர்வு காண முடியும்.

தொடர்மாடிக்கட்டடத்தின் ஸ்திரத்தன்மை

கொழும்பு நகரின் மூலை முடக்கெல்லாம் உயர்ந்த கட்டடங்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. பாதையின் மூலையில் உள்ள ஒவ்வொரு நிலமும் தொடர்மாடி குடியிருப்புக்களுக்கும் மற்றும் பிற உயரமான கட்டடங்களுக்கான சாத்தியமான தளமாக அடையாளம் காணப்படுகிறது. பல கட்டடங்கள் சரியான முறையில் அனுமதி பெறாமலும் கட்டப்பட்டுள்ளன. அவ்வாறு கட்டப்பட்ட சில கட்டடங்கள் உடைந்து விழுந்திருப்பதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். உதாரணமாக இரு வருடங்களுக்கு முன் வெள்ளவத்தையில் ஒரு தொடர்மாடி இடிந்து விழுந்து பல உயிர்களைக் காவுகொண்டது. ஒரு தொடர்மாடி கட்டடம் கட்டுவதாயின் பல நிறுவனங்களிடம் முறையான அனுமதி பெறப்படல் வேண்டும். பெறப்பட்ட அனுமதியின்படி கட்டடத்தை நிர்மாணிப்பதுமில்லை. இவ்வாறு கட்டட நிர்மாணம் சம்பந்தமாக பல நிறுவனங்கள் தொடர்புபட்டிருப்பதால் அனுமதி பெறுதல் இலகுவான காரியமல்ல. இதனால் பல தொடர்மாடி கட்டடங்கள் ஆவணம் அற்ற அடிப்படையில் **('No document' basis)** கட்டப்பட்டுள்ளன. இதனால் இவை காணிப் பதிவு அலுவலகத்தில் பதியப்படவுமில்லை.

இரு வருடங்களுக்கு முன் வெள்ளவத்தையில் ஒரு தொடர்மாடிக்கட்டடம் இடித்து விழுந்து பல உயிர்களைக் காவு கொண்டது.

வெள்ளவத்தையில் தொடர்மாடி இடிந்து விழுந்ததற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. நிர்மாண செயற்கிரமங்களிலுள்ள ஒழுங்கீனங்கள், பொருத்தமற்ற நிலத்தில் இக்கட்டடத்தை நிர்மாணித்தது (கழிவுநீர் வாய்க்காலுக்கு மிக அருகில் இக்கட்டடத்தை நிர்மாணித்தது) மற்றும் நிர்மாணத்தில் ஈடுபட்டவரின் பொறுப்பற்ற செயற்பாடு, அனுமதியில்லாமல் மாடிகளின் எண்ணிக்கையைக் கூட்டியமை போன்ற பல காரணங்கள் கூறப்படுகின்றன.

கட்டடத்தின் ஸ்திரத்தன்மை வாழும்/நகரும் பாரம் **(live load)**. **(live load** என்பது மக்கள் மற்றும் தளபாடங்கள் போன்றவற்றைக் குறிக்கும்) கட்டடத்தின் பாரமாகிய அசைவற்ற பாரம் **(dead load)** என்பவற்றில் தங்கியுள்ளது. உதாரணமாக 100 பேர் வசிப்பதற்கு அனுமதிபெறப்பட்டு 1000 பேர் வசிப்பதற்காக அக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டால் அது இடிந்து விழுவதற்கு மிகக் கூடிய சாத்தியங்கள் உண்டு. கட்டட நிர்மாணத்தில் ஈடுபடுபவர்கள் இவ்விடயத்தில் பொறுப்பற்று இருந்தால் அதனால் பாதிக்கப்படுவது அதில் வாழப்போகும் மக்களே. எனவே தொடர்மாடிக்கட்டடத்தில் வீடு வாங்குபவர்கள், கட்டட நிர்மாணத்தில் ஈடுபடுபவர்கள் எத்தனை மாடிகள் கட்டுவதற்கு அனுமதி பெற்றுள்ளார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

ஒரு தொடர்மாடி இடிந்து விழுந்ததற்கு பல காரணங்கள் உள்ளன. முன்னர் கூறியதுபோல் நிர்மாண செயற்கிரமங்களிலுள்ள ஒழுங்கீனங்கள். வானுயர்ந்த மாடிக் கட்டடங்களை நிர்மாணிக்கப் பொருத்தமற்ற நிலங்களில் அத்தகைய கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் நிர்மாணத்தில் ஈடுபடுபவர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகள் என்பவற்றால் முதலில் கட்டடங்களில் பிளவு ஏற்பட்டு அவை இடிந்து விழுத் தயாராவதற்கு காரணமாகின்றன. பல உயரமான குடியிருப்பு மாடிக்கட்டடங்களில் அத்திபாரத்திலான பிரச்சினைகள் பூஞ்சண பாதிப்பு மற்றும் நீர் ஊடுருவல் காணப்படுவதும் அந்தக் கட்டடங்களில் பிளவு ஏற்படக் காரணமாக அமைகின்றன. குறைந்த தராதரமுள்ள கொங்கிறீற்றை பயன்படுத்தி அத்திபாரமிடப்பட்ட உயர்ந்த மாடிக் கட்டடங்கள் பெரும் அபாயம் மிக்கவை. கட்டடத்தில் ஏற்படும் வெடிப்புக்கு அருகில் புதிதாக நிர்மாணிக்கப்படும் கட்டடமும் காரணமாக அமைந்து விடுகின்றது.

தொடர்மாடிக் குடியிருப்பு தீ பாதுகாப்பு

தொடர்மாடிக் குடியிருப்பில் வாழ்பவர்கள் தீ அவசரகால நிலை பற்றி முன்கூட்டியே சிந்தித்து அதற்குத் தயாராக இருக்க வேண்டும். தீ பாதுகாப்பு உங்களில் ஆரம்பமாகிறது. உங்களுடைய கட்டடத்தில் தீப்பற்றினால் என்ன செய்வது என்பதை அறிந்திருங்கள். உங்களையும் உங்களைச் சுற்றியுள்ளவர்களையும் பாதுகாப்பதற்கு இதுதான் சிறந்த வழி.

கட்டடத்தின் தீப் பாதுகாப்புத் திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள அவசரகாலச் செயல்முறைகள் பற்றி அறிந்திருங்கள். ஒவ்வொரு தீயும் வேறுபட்டது. தீ ஒன்றை நீங்கள் கண்டறியும்போது நீங்கள் விரைவாகச் செயற்பட வேண்டும். அநேகமானவர்கள் புகையினால்தான் இறக்கின்றார்கள், தீயினால் அல்ல என்பதை நினைவில் வைத்திருங்கள்.

அநேகமான நேரங்களில், தீ பற்றியுள்ள போது முடியுமானவரை விரைவில் அந்தக் கட்டடத்தைவிட்டு வெளியேறுவதே மிகச் சிறந்ததாகும். ஆனால் சில நேரங்களில் உங்களால் வெளியேற முடியாதிருப்பதுடன் உங்களுடைய குடியிருப்பில் இருக்கவேண்டியிருக்கலாம். இரண்டு நிலைகளில் எதுவானாலும் ஒவ்வொரு செக்கனும் முக்கியமானதால், நீங்கள் விரைவாகச் செயற்பட வேண்டும். எவ்வளவு கூட நேரம் எடுக்கிறீர்களோ அவ்வளவுக்கு ஆபத்தாகும், ஏனெனில் படிக்கட்டுகள் மற்றும் நடைபாதைகளுக்கு அதிகளவில் புகை பரவியிருக்கும். அத்துடன் நீங்கள் பிழைக்கும் வாய்ப்புகள் குறைவாக இருக்கும்.

(தொடரும்...)

ஞாலம் போற்றும் தாலமே நாளும் எம்மைப் பெறுமதியாக்கும்

வடமாகாணம் தன்னை அடையாளப்படுத்துவதற்கும் உயர்த்துவதற்கும் வாய்ப்பாக அமைந்த உன்னதமான செல்வமே, யாவராலும் கற்பகத்தரு என போற்றப்படும் "பனை" மரம் ஆகும். ஆம்! இது வடமாகாணத்தின் சொத்தாகும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உட்பட இலங்கை முழுவதுமாக ஏறத்தாழ ஒரு கோடிக்கும் மேற்பட்ட பனைமரங்கள் இருந்ததாக போருக்கு முற்பட்ட செய்திகள் சான்று பகர்கின்றது.

ஆனால் தற்போது வடமாகாணத்தில் மட்டும் பனை மரங்கள் வெறும் முப்பந்தைந்து இலட்சமாகவே கணக்கில் பதிவாகின்றன. இது ஆய்வுக்குரியது.

வடமாகாண மக்கள் நீடித்த ஆயுளோடு என்றும் வாழ்வதற்கு மூலாதாரமான பேற்றினை தருவதாக பனை சார்ந்த உணவுப் பொருட்களும் அவை சார்ந்த பனையுமே பிரதான காரணமாகும்.

இதனை மெய்ப்பிற்கும் வகையிலும் மென்மேலும் கற்பகதருக்களை வளர்த்தெடுக்கும் நோக்கிலும், தற்போது இருப்பவற்றை பாதுகாக்க வேண்டிய தோரணையிலும் பனை எழுச்சி வாரமாக கடந்த 22 ஆம் திகதி தொடக்கம் நாளை 28 ஆம் திகதி வரை வடமாகாணத்தில் பிரகடனப்படுத்தியமை மட்டுமல்ல உரியவர்கள் ஒரு பெறுமதியான கண்காட்சி மூலமாக மக்களுக்கு பெரு வரமும் வாழ்வும் அளித்துள்ளார்கள். அவர்கள் வேறு யாருமல்ல, ஆறு மிகப் பெரிய நிலையங்களாகவும் நிறுவனங்களாகவும் சபைகளாகவும் விளங்கும் இணைய கொத்தணி சமாசங்களையே சாரும்.

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிகள், பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்கள், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின்

பேரிணையம், பனை அபிவிருத்திச் சபை, வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவையாகும். உண்மையிலே பாராட்டப்பட வேண்டியது சமாசங்கள், சங்கங்கள், பேரிணையங்கள், சபைகள், திணைக்களங்களேயாகும்.

பனை மான்மியம்

வடக்கு மாகாணத்தினது பனை எழுச்சி வாரத்தின் பனை மான்மியம்-2019 என்ற செய்தியை தாங்கிய மாபெரும் கண்காட்சியும் விற்பனை நிகழ்வும் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மேற்படி நிறுவன ஆதரவுடன் நல்லூர் சங்கிலியன் வளாகத்திலே கடந்த 22 ஆம் திகதி திங்களன்று மிகவும் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. பெருந்திரளான மக்கள் ஆர்வமுடன் கலந்து சிறப்பித்தனர்.

மன்னார் மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம், வவுனியா மாவட்டம், யாழ். மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம் ஆகியவற்றிலிருந்து பெறுமதியான கைவினைப் பொருட்களும் பனைசார் திரவ, திண்ம, உலர் உணவுப் பொருட்களும் மருந்துப் பொருட்களும் மற்றும் ஆரோக்கியமான நாளாந்த பாவனைப் பொருட்களும் தின்பண்டங்களும் சம்பந்தப்பட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களால் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

பனை யிலிருந்து எத்தனை, அத்தனை புதிய படைப்புக்களையும் கொட்டிக்குவித்து விட்டிருந்தார்கள்.

கொள்ளை இன்பம்

பனங்கட்டி, பனங்கட்டிக் குட்டான், பணாட்டு, பனங்களி, பனம்பழ ஜெலி யோகட், பனப்பழப்பானம், பனஞ் சாறு(பதநீர்), பனம் பூரான், நுங்கு, பனம்பாணி, பனங்கள், கல்லாக்காரம், பனங்கற்கண்டு, பனங்குருத்து, பனங்கேக், பனை வெல்லம், பனஞ்சீனி, கருப்பணி, பனம் சொக்கலேட், பனஞ் சோடா ஆகியன மிகவும் பாதுகாப்பான முறையில் விற்பனைக்கான காட்சிப் பொருட்களாக பொதியிட்டும், இறுக்கமாக அடைக்கப்பட்டும் வைக்கப்பட்டிருந்தன. தேவையும் அதுதானே! இதைவிட பிரதானமானதாக புழுக்கொடியல், புழுக்கொடியல்மா, ஒடியல், ஒடியல் மா, பனங்கிழங்கு, பனங்காய்ப் பணியாரம், பனங்கூழ், சத்துமா, ஒடியல் பிட்டு, ஒடியல் கூழ், வெல்லக்கஞ்சி, இலேகியம் என உள்ளத்தைப் பறிகொடுக்கும் பண்டங்கள், ஒவ்வொரு கூடங்களிலும் வேண்டியளவு இருப்புச் செய்யப்பட்டு சீராக வடிவமைக்கப்பட்டிருந்தன. நம்பிக்கையும் கூடவே உபகாரம் செய்யப்பட்டிருந்தன.

பொறுமை என்னும் நகையணிந்து பெருமை கொள்ளும்படியாக பன்னவேலை, பின்னல் வேலை, இழைப்பு வேலை, திருகு வேலை என பனை சார் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதித் தரத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றவாறு பார்ப் போருக்கு விருந்தளித்தன.

அற்புதமாகவும் அதிசயமாகவும் ஆச்சரியமாகவும் பனை ஓலைகளினால் வார்ந்து இழைக்கப்பட்டதும் பின்னப்பட்டதுமான நூற்றுக்கணக்கான கற்பகப் பொருட்கள், அடுக்கடுக்காக காட்சிப்படுத்தியிருந்தமை கண்கொள்ளாக் காட்சியாக மிளிர்ந்து கண்களை வாவென்று கூட்டிச் சென்றன.

குருத்தோலைக் குத்து விளக்கு, குருத்தோலைப் படுக்கைப்பாய், குருத்தோலைப் பெட்டிகள், குருத்தோலைக் கடகங்கள் மற்றும் கவினுறு அலங்காரத்தட்டுக்கள், சுளகுகள்,

மூடுப்பெட்டிகள், கொட்டைப் பெட்டிகள், உமல் பெட்டிகள், பூக்கூடைகள், தொப்பிகள், புத்தகப் பைகள், கோவைக் காவிகள், கழிவுத் தாங்கிகள், பிள்ளைத் தடுக்குகள், பூங்கொத்துப் பேழைகள், காற்று வீசிகள், பட்டைகள், சீலாப்பட்டைகள், நீற்றுப் பெட்டிகள், இடியப்பத்தட்டுக்கள், பல கார வடித்தட்டுக்கள், பால் வடித்தட்டுக்கள், கற்பகச் சின்னங்கள், கற்பக பனையோலைச் சுவடிகள், கற்பக அரிவரிப்பாடங்கள், கற்பக கழுத்து மாலைகள், கற்பக மிதியடிகள், கற்பகத் திருகணிகள், கற்பக இழை நார்கள், கற்பகச் சட்டங்கள், கற்பகத் துடைப்பம், கற்பகத் தோரணங்கள், கற்பக அலங்காரப் பொருட்கள், கற்பக அலுவலகப் பொருட்கள் என்று எக்கச்சக்கமான நெஞ்சையள்ளும் சாதன உபகரணங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு விற்பனைக்கும் விடப்பட்டிருந்தன. சவாலான இன்றைய உலகிற்கு பொருத்தமான சௌபாக்கியமான கண்காட்சி.

மனித வாழ்விற்குத் தேவையான அனைத்தும் கற்பகத்தினால் வாழ்வு பெற்றிடுமாறு அமைவதனால் பனை மான்மியம், கற்பக மான்மியம் என்று பொருள் கொள்ளப்படுகிறது.

கிட்டத்தட்ட 40 கிராம ஊழியர்களின் கரங்கள் பனை மான்மியத்தில் படைப்பாளிகளாக்கி, சாதனையாளர்களாக்கியுள்ளமை பாராட்டுதற்குரியது.

மேலும் 100 மாணவர்கள் ஓவியப் போட்டியில் பரிசில்களை வென்றிருக்கின்றனர். 37 சங்க அங்கத்தவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர். தாலம் சஞ்சிகை மூலம் சாதனைகள் பதிவாகின்றன.

வடமாகாணத்தின் அத்தனை பெரியோர்களும் மனதார வாழ்த்திப் போற்றி பாராட்டியுள்ளார்கள். பனை மான்மியம் 2020 இன்னும் பல வரங்களைத் தரவேண்டும். சாவகச்சேரி சுவையகம் மிகவும் பிரமாதம். பனங்கூட்டியுடன் தேநீர் மிகரம்மியமானது.

கே.எஸ்.சிவஞானராஜா

விசாரணைகளின்றி 7 இலட்சத்து 50 ஆயிரம் வழக்குகள் நிலுவையிலுள்ளன-தலதா தகவல்

(பத்தரமுல்லை)

சுமார் 7 இலட்சத்து 50 ஆயிரம் வழக்குகள் விசாரணை செய்யப்படாமல் நிலுவையில் இருப்பதாகவும் அவற்றை விரைவாக விசாரணை செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

தேசிய மத்தியஸ்த தின நிகழ்வு நேற்று முன்தினம் பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மேற்கண்டவாறு குறிப் பிட்டதுடன். வெளியாரின் தலை யீட்டுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் நீதித்துறை முழு சுதந்திரமாக செயற்பட்டு வரு கிறது என்றும் தெரிவித்தார்.

கடந்த வருட இறுதியில் இடம் பெற்ற அரசியல் நெருக்கடி நிலைமையின் காரணமாக அநேக மான அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்படாமல் இடை நிறுத்தப்பட் டிருந்தன.

மத அடிப்படைவாதச் செயற் பாடுகளின் காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி தொடர் குண்டுத் தாக்குதல்களால் எமது மக்கள் கொல்லப்பட்டார்கள். இவ்வா றான நிலையில் நாளை என்ன நடக் கும் என்று எவராலும் குறிபிட முடியாது.

அத்துடன் எந்தவொரு காரணத்துக்காகவும் வெளிநாடுகளின் தலையீடுகளுக்கு இடமளிக்கப் போவதில்லை. அரசியல் நோக்கங் களுக்காகவோ அரசியல் பழி வாங்கல்களுக்காகவோ நாங்கள் செயற்படவில்லை. மக்கள் எங்களுக்கு வழங்கிய ஆணைகளை நடைமுறைப்படுத்தவே முயற்சிப் பதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ஐ)

கன்னியா வெந்நீரூற்று விவகாரம்

இனமோதலை ஏற்படுத்த நினைத்தால் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் ஏற்பட்டுள்ள அமைதி சீர்குலையும்

சுசந்த புஞ்சிநிலமே எச்சரிக்கை

(திருமலை)

திருகோணமலையில் இன மோதலை ஏற்படுத்தினால் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் ஏற்பட்டுள்ள அமைதி சீர்குலையும் என ஜக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது மேலும் தெரிவித்த அவர்,

கன்னியா வெந்நீரூற்று தொல்பொருள் சான்றுள்ள இடமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் அது அமைந்துள்ள இடத்துக்கு கோகிலா ரமணி என்ற பெண் உரிமை கோரியுள்ளார். அத்துடன் இராவண சேனை என்ற அமைப்பும் இன்னொரு அமைப்பும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து மக்களை அழைத்துவந்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் அப்பகுதியில்

இன முறுகல் நிலையை ஏற்படுத்தின.

நான் அம்மாவட்ட எம்.பி. என்ற அடிப்படையில் கன்னியா வெந்நீரூற்று விடயத்தில் தொல்பொருள் சட்டத்தை அமுல்படுத்துமாறு கூறினேன். இதனையடுத்து நான் இனமோதலையும் இனவாதத்தையும் தூண்டுவதாக இந்த அமைப்புக்கள் என் மீது குற்றம் சாட்டின. நான் இம் மாவட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் வாக்குகளையும் பெற்றவன் என்ற அடிப்படையில் இது எனது சிறப்புரிமையை மீறுவதாகவுள்ளது. அத்துடன் எதிர்வரும் 31 ஆம் திகதி மீண்டும் ஒரு குழப்ப நிலையை அப் பகுதியில் ஏற்படுத்த இவர்கள் முயற்சிக்கின்றனர்.

இவர்களின் இச்செயற்பாடு திருகோணமலையில் இன மோதலை ஏற்படுத்தினால் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் ஏற்பட்டுள்ள அமைதிக்கு அழிவையே ஏற்படுத்தும் என மேலும் தெரிவித்தார். (ஜ)

ஆழ்கடல் மீன்களை திருடுபவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் ஆழ்கடல் பிரதேசத்தில், கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்களின் வலையில் சிக்கிய மீன்களைத் திருடிவரும் கொள்ளைச் சம்பவத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கமும் பொலிஸாரும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்து கல்முனையில் மீனவர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர். இவ் ஆர்ப்பாட்டத்தை அம்பாறை மாவட்ட மீனவ சங்கங்களின் சமாசம் மற்றும் அம்பாறை மாவட்ட ஆழ்கடல் இயந்திரப் படகு உரிமையாளர்கள் சங்கம் என்பன இணைந்து இவ் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தது.

ஆழ்கடலில் வலையில் சிக்குகின்ற மீன்களைத் திருடும் சம்பவம் சுமார் எட்டு வருடங்களாக இடம்பெற்று வருவதாக அம்பாறை மாவட்ட மீனவ சங்கங்களின் சமாச தலைவர் ஏ.பி.ஏ. றஹீம் இதன் போது தெரிவித்தார்.

இதனால் கடற்றொழிலாளர்களின் பல்லாயிரம் ரூபா பெறுமதியான வலைகள் நாசம் செய்யப்படுவதுடன் கஷ்டப்பட்டு பிடிக்கின்ற மீன்களையும் களவு கொடுக்கின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குதிரை வலு கூடிய இயந்திரப் படகைப் பயன்படுத்தியே இவ்வாறான ஆழ்கடல் மீன்கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதுடன், உயிர் அச்சுறுத்தல்களும் விடுக்கப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (ஜ)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1789

Search for people, places and things

தனீசா

மிஸ்ரிகா

அஜந்தா

ஜரீன்

சஞ்சனா

ஹாசினி

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினரின் வாக்குகளே வெற்றியை தீர்மானிக்கும்

எஸ்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மையினரின் வாக்குகளினால் மாத்திரம் எவரும் வெற்றியடைய முடியாது. சிறுபான்மையினரின் வாக்குகளே இறுதியில் வெற்றியை தீர்மானிக்குமென நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "ஐ.தே.க.முறையாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடையவில்லை என்பதற்கு வரலாற்றுச் சம்பவங்கள்தான் சிறந்த உதாரணங்களாகும்.

அந்த வகையில் தற்போது ஜனாதிபதித் தேர்தல் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன.

மேலும் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இனக்கலவரத்தை ஏற்படுத்துவதற்குக் கூட ஐ.தே.க.தயங்காது.

அத்துடன் தனிச் சிங்கள வாக்குகளைப் பெற்று யாரும் இதுவரை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படவில்லை.

ஆகையால் சிறுபான்மையின மக்களான தமிழ்-சிங்கள மக்களின் வாக்குகளும் தேர்தலில் வெற்றியடைவதற்கு மிகவும் அவசியம்" என எஸ்.பி.திஸாநாயக்க மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ஜ)

புத்தளம் கடற்கரையோரங்களில் கரையொதுங்கும் கழிவுப் பொருட்கள்

மீனவர்கள் விசனம்

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தின் கடற்கரையோரங்களில் மருத்துவ கழிவுப் பொருட்கள் உள்ளிட்ட பல கழிவுப் பொருட்கள் அண்மைக்காலமாக அதிகளவில் கரையொதுங்கி வருவதாக மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சிலாபம் முதல் நுரைச்சோலை வரையிலான பல கிலோ மீற்றர் தூரமுடைய கடற்கரையோரங்களில் இவ்வாறான கழிவுப் பொருட்கள் கரை ஒதுங்கியுள்ளமையினால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த கழிவுப் பொருட்களினால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படலாம் என கடற்கரையை அண்டி வாழும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுபோன்று கடந்த வருடமும் இவ்வாறான கழிவுப் பொருட்கள் கரை ஒதுக்கியதால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

எனவே இவ்வாறு கழிவுப் பொருட்கள் கரை ஒதுங்குவதை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மீனவர்களும் மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ)

பூங்காவில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் படுகாயம்

(யால)

கதிர்காமம் - யால வனப் பகுதியில் மணிக்க கங்கையில் சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டவர்களுக்கும் வன பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இடையில் இடம் பெற்ற பரஸ்பர துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாணிக்க கங்கையில் சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபடுவதாக கடந்த வியாழக்கிழமை வன பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சந்தேக நபர்களை கைது செய்வதற்காகச் சென்ற வன அதிகாரிகள் மீது சந்தேக நபர்களால் துப்பாக்கிக் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து சந்தேக நபர்களுக்கும் வன பாதுகாப்பு அதிகாரிகளுக்குமிடையில் பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. காயமடைந்த சந்தேக நபரொருவர் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஜ)

காலவரையறையின்றி மூடப்பட்டிருந்த பேராதனை முகாமைத்துவப் பீடம் மீண்டும் திறக்கப்படவுள்ளது

(கண்டி)

பேராதனை பெரதெனிய பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடம் எதிர்வரும் 29 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி பேராதனை பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடம் மறு அறிவித்தல் வரும் வரை மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

செய்தித்துளிகள்

இரு வேறு விபத்துக்களில் இருவர் உயிரிழப்பு

(கல்முனை)

பொரலஸ்கமுவ மற்றும் கல்முனை பகுதிகளில் இடம் பெற்ற வீதி விபத்தில் இருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

பொரலஸ்கமுவ, ஹொரண - கொழும்பு பிரதான வீதியில் பில்லேவ விகாரைக்கு அருகில் சைக்கிள் ஒன்று லொறி ஒன்றில் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது சைக்கிளை செலுத்திச் சென்றவர் படுகாயமடைந்த நிலையில், களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர் கல்கிஸை பகுதியை சேர்ந்த 67 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, கல்முனை, கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் 37 வயதுடைய முச்சக்கர வண்டி சாரதி உயிரிழந்துள்ளார்.

முச்சக்கர வண்டி லொறி ஒன்றுடன் மோதியே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ஜ)

தெற்காசியாவில் முதன்முறையாக கட்டுநாயக்கவில் ஏற்பட்ட மாற்றம்



(கொழும்பு)

தெற்காசிய நாடுகளில் முதன் முறையாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் விமான ஓடு பாதையில் LED மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.

LED மின்குமிழ்கள் பொருத்தப்பட்ட பின்னர் அதனை இரவில் ஒளிரச் செய்து விமான பயணங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இந்த முயற்சி பரீட்சை செய்து பார்க்கப்பட்டதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவித்தன. (ஜ)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	அருதனார் புடம்	சாவகச்சேரி	கொடிகாமம்	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	60	70	40	50	60
உருளைக்கிழங்கு	140	120	120	110	120
பக்கு மிளகாய்	200	250	250	200	200
தக்காளி	100	90	100	70	100
மரவள்ளிக்கிழங்கு	150	150	140	110	100
கோவா	80	80	80	60	80
கரட்	160	100	180	120	160
பூசணி	50	80	70	50	80
புடோல்	80	80	60	70	100
வாழைக்காய்	100	120	120	60	120
சின்ன வெங்காயம்	100	130	140	140	120
பெரிய வெங்காயம்	80	120	120	110	120
பாகற்காய்	140	100	140	160	200
வெண்டிக்காய்	40	50	60	60	100
கருவேப்பிலை	60	100	110	50	100
பயற்றங்காய்	40	80	40	60	80
லீக்ஸ்	60	80	100	70	100
பீற்றூட்	80	60	70	60	120
கறிமிளகாய்	150	150	200	200	200
முருங்கைக்காய்	60	80	60	70	120
போஞ்சி	120	120	160	110	200
கத்தரிதம்புள்ள	50	50	30	50	40
கீரை - 1பிடி	30	30	20	20	30
தேசிக்காய்	180	200	200	250	400
தேங்காய் (ஒன்று)	30	30	30	25	20-40
இராசவள்ளி	200	180	180	140	200
வெங்காயப்பூ	120	140	160	150	200
முள்ளங்கி	80	60	60	30	80
பொடி ஈரங்காணி	40	30	40	20	40
வல்லாரை	15	30	20	10	20
ஈரப்பலா	50	70	60	140	60

வளையல்

முன்னொரு காலத்தில் கமலாபுரம் என்னும் ஊரில் ஒரு வணிகன் வாழ்ந்து வந்தான். அவன் தினமும் வெளியூர் சென்று கை வினை பொருட்களை வாங்கி வந்து ஊர் ஊராய் விற்று வாழ்க்கையை நடத்தி வந்தான். அவனுக்கு ஒரு மனைவி. அவள் வீட்டு வேலைகள் அனைத்தையும் பார்த்துக்கொண்டு, தினமும் இவன் வாங்கி வரும் கைவினை பொருட்களை தரம் வாரியாக பிரித்து கொடுத்து அவனுக்கு உதவி செய்வாள். அதன் பின் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பண்டம் என்று விலை வைப்பார்கள். (குட்டீஸ் பண்டம் என்பது அந்த காலத்தில் பணத்திற்கு பதிலாக பொருளை மாற்றி கொள்வது).

வணிகன் அன்று வெளியூர் சந்தைக்கு சென்று நிறைய கைவினை பொருட்களை வாங்கி வந்தான். அகல்விளக்கு, வண்ண வண்ண கை வளையல்கள், ஆபரணங்கள். போன்றவைகள் நிறைய வாங்கி வந்தான். அவன் மனைவி அவைகளை ஒவ்வொன்றாய் பிரித்து வைத்தாள். அப்பொழுது ஓர் ஜோடி வளையல்களின் அழகு அவள் மனதை பறித்தது. வணிகனிடம் இதை நான் வைத்து கொள்கிறேன் என்றாள். வணிகன் அதை வேறொருவர் கேட்டிருக்கிறார், அதனால் உனக்கு அடுத்த முறை வாங்கி வந்து தருகிறேன் என்றான்.

இவளுக்கு மனசே கேட்கவில்லை. அதன் அழகு அப்படி அவள் மனதை ஈர்த்து விட்டது. இரவு இருவரும் அயர்ந்து தூங்கி கொண்டிருக்கும்பொழுது, இவள் மெதுவாக எழுந்து அந்த ஜோடி வளையல்களையும் மறைத்து வைத்து விட்டாள்.

மறு நாள் காலை வழக்கம்போல் வணிகன் எழுந்து தயாரானான். அவன் மனைவி எல்லா பொருட்களையும் ஒரு பெரிய துணி பையில் போட்டு அவனிடம் கொடுத்தாள். அவன் அதை சுமந்து கொண்டு வியாபாரம் செய்ய கிளம்பினான்.

பண்ட மாற்று முறை என்பதால் தனியாக ஒரு பையையும் எடுத்து செல்வான்.

ஒரு வளையல் ஜோடி கொடுத்தால், இரண்டு ஆழாக்கு தானியமோ இல்லை, இரண்டு பெரிய கருப்பட்டி துண்டுகளோ கிடைக்கும். இன்னும் கொஞ்சம் அதிக மதிப்புள்ள பொருள் என்றால் அதற்கு நகைகள் கூட கிடைக்கும். இப்படி நிறைய பொருட்களை சேகரித்து அதை சந்தைக்கு சென்று கொடுத்து இந்த கைவினை பொருட்களை வாங்கி வருவான்.

வணிகனின் மனைவி அவன் போன பின் அவசர அவசரமாக அவள் ஒளித்து வைத்திருந்த வளையலை எடுக்கச் சென்றாள். ஆனால் அந்த வளையல்கள் வைத்த இடத்தில் காணவில்லை. சுற்று முற்றும் தேடி பார்த்தாள் எங்கும் கிடைக்கவில்லை. எங்கு போயிருக்கும்? என்னவாயிருக்கும் என்று அதிர்ச்சியாய் நின்றாள்.

இங்கு இப்படி இருக்க அந்த ஜோடி வளையல்களின் கதை என்னவென்றால்,

குச்சியூர் என்னும் ஊரில் இரு திருடர்கள், வசித்து வந்தனர். அவர்கள் இரவானதும் பலரது வீட்டில் கன்னம் வைத்து எது கிடைத்தாலும் சுருட்டி கொள்வார்கள். அவர்கள் ஒரு முறை ஒரு வீட்டில் கன்னம் வைத்து உள்ளே போய் அங்கிருந்த ஒரு பித்தளை செம்பை தூக்கி வந்து விட்டனர். அந்தோ பரிதாபம், அவர்கள் திருடிய இடம் ஒரு மந்திர வாதியின் வீடு. அவர் பித்தளை செம்பை யார் எடுத்தார்கள் என்று கண்டு பிடித்து விட்டார். அவர்களுக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து அவர்கள் வளையலாய் ஆகிவிடுவார்கள் என்று மந்திரம் போட்டு விட்டார்.

இதை அறிந்த திருடர்கள், ஐயோவென்று அந்த மந்திர வாதியிடம் ஓடி பித்தளை செம்பை கொடுத்து விட்டு மன்னிப்பு கேட்பார்கள். இவர்களின் கெஞ்சலை பார்த்த மந்திரவாதி சரி. நீங்கள் இரவு மட்டும் மனிதர்களாகவும், பகலில் வளையல்களாகவும் இருப்பீர்கள், வளையல்களாக உங்களை பார்த்த உடனே அதன் அழகில் மயங்கி எடுத்து கொள்ள வேண்டும் என்று யாராவது ஒளித்து வைத்தால் அன்று உங்களுக்கு முழு உருவம் கிடைத்து விடும். என்று விமோசனம் சொன்னார்.

அது போலவே வணிகனின் மனைவி ஆசைப்பட்டு அந்த வளையலை கணவனுக்கு தெரியாமல் ஒளித்து வைக்க, வளையல்கள் சாப விமோசனம் பெற்று மனிதர்களாக உருமாறி தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடினர்.

அப்படி ஓடிக்கொண்டிருக்கும் பொழுது ஒரு திருடன் தன் நண்பனிடம் நாம் இனிமேல் திருட்டு தொழிலை விட்டு விட்டு உழைக்க ஆரம்பிக்க வேண்டும் என்றான். அதை கேட்ட மற்றவன் ஆமாம், ஆமாம், இனி மேல் நாம் இந்த திருட்டு தொழிலை விட்டு விடலாம் என்று முடிவு செய்தவர்கள், சரி, பாவம் அந்த பெண், வளையல்களை ஒளித்து வைத்து விட்டு காலையில் அதை தேடிக் கொண்டிருப்பாளே? ஒருவன் கேட்க மற்றவன் கொஞ்சம் பொறு, நாம் அவன் கணவனுக்கு இதன் மூலம் ஏதாவது உதவி செய்து விடலாம் என்றான்.

வணிகனுக்கு அன்று அதிகமாக வியாபாரம் ஆகவில்லை. மன சோர்வுடன், வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்தான். அப்பொழுது இரு திருடர்களும், அவனிடம் சென்று பேசினார்கள். ஐயா எங்களிடம் கொஞ்சம் ஆபரணங்கள் இருக்கின்றன, அதை உங்களுக்கு கொடுக்கிறோம். இதை கொண்டு போய் இந்த ஊர் கிராம தலைவரிடம் ஒப்படைத்தால் அவர் உங்களுக்கு பொன்னும் பொருளும் அளிப்பார் என்றான். வணிகனுக்கு ஒன்றும் புரியவில்லை. அதை நீங்கள் செய்யலாமே? என்னிடம் ஏன் கொடுக்கிறீர்கள் என்று கேட்டான்.

அவர்கள் நடந்த கதையை சொன்னார்கள். வணிகனின் மனைவி மூலம்தான் தாங்கள் சாப விமோசனம் பெற்றதும், இனிமேல் திருட்டு தொழிலை செய்வதில்லை என்று முடிவு செய்துள்ளோம்.

இது எல்லாம் கிராம தலைவர் வீட்டில் கொள்ளை அடித்தது. இதை கொண்டு போய் ஒப்படைத்து பரிசுகளை பெற்றுக்கொள்ளுங்கள். அவர்கள் இதை கண்டு பிடித்து கொண்டு வந்து தருபவர்களுக்கு பரிசு வழங்குவார்கள் என்று அறிவித்துள்ளார்கள்.

அதனால் தைரியமாக எனக்கு புதரில் கிடந்தது என்று சொல்லுங்கள்.

வணிகன் மகிழ்ச்சியாக அதை பெற்றுக்கொண்டு கிராம தலைவரை பார்க்க சென்றான்.

வீட்டுக்கு வந்த பொழுது வணிகனின் மனைவி இவனை பயத்துடன் வரவேற்றாள்.

அவளுக்கு அந்த வளையல்கள் காணாமல் போனது ஒரு புறம், தன் கணவன் அதை எங்கே என்று தேடி, அதை நம்மிடம் கேட்டால் என்ன சொல்வது? இந்த கவலைகள்தான்.

ஆனால் வணிகனோ மிக மகிழ்ச்சியாக இருந்தான். அது மட்டுமல்ல தன் மனைவியை கூப்பிட்டு அவள் கையில் ஒரு பொருளை துணியால் சுற்றி கொடுத்தான். அதை பிரித்து பார்த்தாள்.

"ஒரு ஜோடி வளையல்கள்" அச்சு அசலாக காணாமல் போன வளையல் போல் இருந்தது. கேள்விக்குறியுடன் கணவனை பார்க்க, அவன் நடந்த அனைத்தையும் சொல்லி கிடைத்த பரிசுப்பொருளில் உனக்கு பிடித்த வளையல்களையும் வாங்கி வந்தேன் என்றான்.

வணிகனின் மனைவிக்கோ மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. இருந்தாலும் தான் வளையலை மறைத்து வைத்தது தவறு என்றும், இனிமேல் அப்படி செய்ய மாட்டேன் என்றும் அவனிடம் உறுதி கூறினாள்.

விடுகதைகளும் விடைகளும்

• அரை சாண் அரசனுக்கு, அரை சாண் கிரீடம். அவன் யார்?

கத்தரி

• குண்டு ராஜாவுக்கு குடல் முழுக்க பல். அது என்ன?

மாதுளை

• காலத்துக்கும் எரிவேன், கடலைக்கூட வற்ற வைப்பேன். நான் யார்?

சூரியன்

• கொடி உடம்புக்காரிக்கு குண்டு குண்டாய் பிள்ளைகள். அது என்ன?

பூசனிக்காய்

• ஓட்டைக் குச்சியில் ஒய்யார ராகம் இசைக்கலாம். அது என்ன?

புல்லாங்குழல்

இலங்கை பற்றிய சுவாரஸ்யமான தகவல்கள்

• இலங்கையின் வடிவமைப்பை வைத்து அது இந்திய பெருங்கடலின் முத்து **(Pearl of the Indian Ocean)** மற்றும் இந்திய நாட்டின் கண்ணீர் துளி **(Teardrop of India)** என அழைக்கப்படுகிறது.

• கிரிக்கெட் தான் இலங்கையில் மிக பிரபலமான விளையாட்டாக இருந்தாலும், அந்நாட்டின் தேசிய விளையாட்டு கைப்பந்தாகும்.

• இலங்கையானது உலகின் மிகப்பெரிய அளவில் தேயிலையை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒன்றாக திகழ்கிறது.

• இலங்கையில் உள்ள சிவனொளிபாத மலை **(Adam's Peak)** மிக புனித மலையாக கருதப்படுகிறது.

• இலங்கையில் மொத்தம் பதினோரு பல்கலைகழகங்கள் உள்ளது.

• அந்த நாட்டில் உள்ள மொத்த மக்களில் 92 சதவீதம் பேர் படிப்பறிவு கொண்டவர்களாக இருப்பது கூடுதல் சிறப்பாகும்.

கடவுளுக்கு தரும் காணிக்கையை விட
ஒரு ஏழைக்கு தரும் கல்வி மேலானது.
-- அம்பேத்கர்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

கடன் கழிப்பாகிவிட்ட பாராளுமன்ற உரைகள்

இஃது நீதிபதியாக இருந்த விகடகவி மு.திருநாவுக்கரசு அவர்கள் கூட்டமொன்றில் ஆற்றிய உரை;

"இசை நிகழ்வொன்றுக்கு நான் சென்றிருந்தேன். அந்த இசை நிகழ்வின் மேடையில் பாடுபவருடன் அணிசேர் கலைஞர்கள் இருந்தனர்.

சபையில் என்னுடன் சேர்த்து ஐந்து பேர் மட்டுமே பரவாயில்லை. ஐந்து பேராவது இசையை ரசித்துக் கேட்கின்றனர் என்று நினைத்து எனக்கு அருகில் இருந்தவரிடம்,

ஐயா! உங்களைப் போன்றவர்கள் இசையை இரசிப்பதால்தான் கர்நாடக சங்கீதம் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறது என்றேன்.

அதற்கு அவர், பாடுபவரின் முன் இருப்பது எனது ஒலிவாங்கி என்றார்.

அடுத்தவரைப் பார்த்தேன். அவரோ பக்க வாத்தியக் கலைஞர்களை அழைத்து வந்த ஆட்டோ உரிமையாளர் என்றார்.

இப்போது எங்கள் மண்ணில் கர்நாடக இசையின் நிலைமை இதுதான்"

இவ்வாறு தனது உரையில் நீதிபதி மு.திருநாவுக்கரசு அவர்கள் கூறினார்.

அது சரி, அவர் ஆற்றிய உரையை இப்போது ஏன் கூறிகிறீர்கள் என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம். அவ்வாறான கேள்விக்குப் பதில் இதுதான்.

இலங்கைப் பாராளுமன்ற அமர்வுகளின் நேரடி ஒளிபரப்புகளை தொலைக்காட்சியில் பார்க்கும்போதெல்லாம் நீதிபதி திருநாவுக்கரசு அவர்கள் ஆற்றிய உரைதான் எமக்கு ஞாபகம் வரும்.

அந்தக் கர்நாடக இசை போல் பாராளுமன்றத்திலும் சபாநாயகர் உட்பட ஒரு சிலர் மட்டுமே அமர்ந்திருப்பர். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுந்து நின்று உரையாற்றுவார்.

அந்த உரையை யாரேனும் கேட்பதாக இல்லை. அதிலும் சபையில் இருக்கின்றவர்களில் ஒரு சிலர் நித்திரையாகி விடுகின்ற வழக்கமும் உண்டு.

இதில் வேடிக்கை என்னவென்றால், பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகள், எத்தனையோ பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாது என்பதுதான்.

சபையில் தாம் இல்லாதபோது ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னதான் பேசினார்கள் என்பதை அறிகின்ற ஆர்வமும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இல்லை.

இதுதான் இலங்கைப் பாராளுமன்றத்தின் சமகால நிலைமையாக இருக்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், பாராளுமன்றத்தில் சம்பந்தர் இடித்துரைப்பு, எடுத்துரைப்பு, கடிந்துரைப்பு என்று கூறுவதெல்லாம் அர்த்தமற்றவை.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஆற்றுகின்ற உரையை எல்லோரும் கேட்க வேண்டும். ஆனால் அவ்வாறு கேட்காத பட்சத்தில் கடன் கழிப்புக்காக பாராளுமன்றத்தில் உரையாற்றலாமேயன்றி, மற்றும்படி அந்த உரைகள் பதில்கள் அற்ற பதிவுகளாக மட்டுமே இருக்கப் போகின்றன.

இதன்காரணமாகவே பாராளுமன்றத்தில் ஆற்றுகின்ற உரைகளால் எந்தப் பிரயோசனமும் மக்களுக்கு ஏற்படுவதில்லை.

ஒரு காலத்தில் பாராளுமன்றத்தில் ஆற்றுகின்ற உரை என்றால், அதற்கான கனதி மிகவும் காத்திரமானது. இப்போது அந்த நிலைமை இல்லை என்றாகிவிட்ட பின்பு எல்லாமும் அர்த்தமற்றதாயிற்று.

- 200 ரயில் குறுக்குப் பாதைகளில் -

மின்ஓசை வர்ண சமிஞ்ஞைகள் பொருத்துவதற்கு நடவடிக்கை

அமைச்சர் அர்ஜுன தெரிவிப்பு

(கொழும்பு)

நாடுமுழுவதும் 200 தொடருந்து குறுக்குப் பாதைகளில் மின் ஓசை எழுப்புதல் மற்றும் வர்ண சமிஞ்ஞைகள் பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக போக்குவரத்து சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அங்கேரிய நாட்டின் கடன நிதி உதவியின் கீழ் எதிர் வரும் 2 வருட காலப்பகுதிக்குள் மின் ஓசை மற்றும் வர்ண சமிஞ்ஞைகளுடன் 200 ரயில் குறுக்கு பாதைகள் முழுமையாக உள்வாங்குவதற்கு இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா சபையில் எழுப்பிய கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளித்தார். ரயில் குறுக்குபாதை மற்றும் அதன் பாதுகாப்பு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் இந்த கேள்வியை முன்வைத்திருந்தார்.

நாடு முழுவதிலும் 1337 ரயில் குறுக்கு பாதைகள் இருப்பதாக தெரிவித்த அமைச்சர் இவற்றுள் 185 ரயில் குறுக்கு பாதைகள் தனியார் துறையினால் கையாளப்படுகின்றது. இதற்கு அமைவாக ரயில் திணைக்களத்தினால் பாதுகாப்பு வழங்கக் கூடிய ரயில் குறுக்கு பாதைகளின் எண்ணிக்கை 1152. இவற்றுள் 608 குறுக்கு பாதைகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வீதி தடைகளுடனான 181 குறுக்குப் பாதைகளும் மின் ஓசை மற்றும் வரண சமிக்ஞை கட்டமைப்புடனாக 327 கட்டமைப்பு களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது .என்றும் குறிப்பிட்டார். (03)

வர்த்தக நிலையம் தீயில் எரிந்து நாசம்

அச்சுவேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி நகரப்பகுதியில் அமைந்துள்ள தேநீர் கடையில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தினால் வர்த்தக நிலையம் முற்றாக எரிந்து தீக்கிரையாகியுள்ளது.

சம்பவ இடத்திற்கு வந்த இராணுவத்தினர் மற்றும் அச்சுவேலி பொலிஸார் இணைந்து தீயினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதனால் அருகிலிருந்த சிகை அலங்கரிப்பு நிலையம் தீ பரவலில் இருந்து தப்பியுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (03)

'முக உத்தர' திருத்தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி திருக்கோவில் "முக உத்தர" திருத்தேர் வெள்ளோட்டப் பெருவிழா நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறும்.

இங்கு இடம்பெறும் கார்த்திகைத் திருவிழா, வெள்ளோட்டப் பெருவிழா மற்றும் சப்பறம், தேர், தீர்த்தம் ஆகிய விழாக்களில் கலந்து கொள்ள பேரூர் ஆதீன குரு மகா சந்நிதானம் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

மாருதப் புரவீகவல்லி கோயில் அமைந்த காலம் முதல் பேரூர் ஆதீனம் மாவை ஆதீனத்துடன் தொடர்புகளைப் பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

இறக்குமதி பால்மா தரம் குறித்த சர்ச்சை இடைக்கால அறிக்கை ஜனாதிபதியிடம்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் தரம் தொடர்பில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பான இடைக்கால அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் தரம் தொடர்பில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான இந்த இடைக்கால அறிக்கை நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

நுகர்வோர் அதிகார சபையால் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த அறிக்கை வர்த்தக மற்றும் வணிக அலுவல்கள் பதில் கடமை அமைச்சரான புத்திக பத்திரணவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

முல்லையில் விபத்து காயமடைந்தவர் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, முத்து ஐயன் கட்டு, புனித பூமி வீதியில் கடந்த 30.05.2019 அன்று முச்சக்கரவண்டியும் உந்துருளியும் மோதிக் கொண்ட விபத்தில் காயமடைந்த இளைஞன் சிகிசசை பலனின்றி நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

முள்ளியவளை 03ஆம் வட்டாரத்தினைச் சேர்ந்த25 அகவையுடைய சிவலிங்கம் கௌசிகள் என்ற இளைஞனே மரணமானவராவார்.

விபத்தில் காயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இவர் உயிரிழந்துள்ளார். (03)

பாரபட்சம் காட்டாமல் அரசாங்கம் வேலைவாய்ப்பை வழங்க வேண்டும்

வடக்கு வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம், பாரபட்சம் காட்டாமல் வேலை வாய்ப்பை வழங்க வேண்டுமென வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று (வெள்ளிக் கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளில் அரச நியமனம் வழங்கப்படாத பட்டதாரிகள் நேற்று பதிவுகளை மேற்கொண்டனர்.

வேலையற்ற பட்டதாரிகளில் ஒரு தொகுதியினருக்கு அரச நியமனம் வழங்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்த நியமனத்தில் உள் வாங்கப்படாத பட்டதாரிகளே நேற்று தமது விபரங்களை பதிவு செய்துகொண்டுள்ளனர்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள அரச நியமனத்தில் 2017ஆம் ஆண்டு 6ஆம் மாதத்திற்குப் பின்னரான உள்வாரிப் பட்டதாரிகள், எச்.என்.டீ.ஏ. பட்டதாரிகள் மற்றும் வெளிவாரிப் பட்டதாரிகள் பலருக்கு நியமனம் வழங்கப்படவில்லை.

இதன்போது பட்டதாரிகளிடத்தே பாரபட்சம் காட்டாமல் பட்டம் பெற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் அரசாங்கம் வேலை வாய்ப்பை வழங்க வேண்டுமென வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் கேட்டுள்ளனர். (03)

மதுபோதையில் சாரத்தியம் இதுவரை 5,497பேர் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் காலை முதல் நேற்றுக் காலை வரை முடிவடைந்த காலப்பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 235 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுவரையில் நாடுமுழுவதும் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் மதுபானம் அருந்தி வாகனம் செலுத்திய நிலையில் புதிய சட்டத்தின் கீழ் 5ஆயிரத்து 497 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

- கிடைக்கும் பலனில் மட்டும் கருத்தைச் செலுத்த வேண்டாம். அதை அடையும் வழியிலும் நேர்மை இருக்கட்டும்.
- எந்தச் செயலிலும் கைம்மாறு கருதாமல் பொதுநலத்துடன் ஈடுபடுங்கள். அதுவே உண்மையான இன்பம்.
- நன்மையைப் போல தீமையில் இருந்தும் மனிதன் பாடம் கற்றுக் கொள்ள முடியும்.
- உலக இன்பம் மட்டுமே வாழ்வின் நோக்கம் அல்ல. கடவுளைப் பற்றிய ஞானமே பிறவிப்பயன்.
- ஏளனம் செய்பவர்களைப் பொருட்படுத்த வேண்டாம். கொண்ட லட்சியத்தில் உறுதியோடு ஈடுபடுங்கள்.

இறுதியாட்டத்துக்கு சைனிங்ஸ்
நேதாஜி அணிகள் தகுதி

வல்வை விளையாட்டுக்கழக மாலுமிகள் நடத்தும் வல்வைக்குட்பட்ட கழகங்களிடையேயான பெருவிளையாட்டுத் தொடரின் ஓர் அங்கமான 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டத்துக்கு சைனிங்ஸ் மற்றும் நேதாஜி அணிகள் தகுதி பெற்றுள்ளன. (க)



நெடுங்கேணி மத்தி விளையாட்டுக் கழகம் மற்றும் சேமமடு முத்தமிழ் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றிற்கு சமூக சேவையாளர் இ. மோர்சிபவனினால் சீருடைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.(க)

இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் ஓய்வுக்கான காரணம் இதுவே - மலிங்க

இலங்கை ஒரு நாள் அணியில் புதிய வீரர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் தான் சர்வதேச ஒரு நாள் போட்டி களிலிருந்து ஓய்வு பெறுவதாக மூத்த இலங்கை நட்சத்திர வீரர் மலிங்க கூறியுள்ளார்.

நேற்றயை போட்டியுடன், மலிங்கா ஒரு நாள் போட்டிகளிலி ருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறி வித்துள்ளார். எனினும், மலிங்க தொடர்ந்து இருபது-20 போட்டி களில் விளையாடுவார்.

இந்த நேரத்தில் ஓய்வு பெறுவது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இது புதிய வீரர்க ளுக்கு அவர்களின் திற மையை வெளிபடுத்தவும் அடுத்த உலகக் கோப்பைக்கு தயாராகவும் ஒரு நல்ல வாய்ப்பாக அமையும். நாங்கள் பல பின்னடைவுகளை சந்தித்து இருக்கலாம், ஆனால், மீண்டு வந்து அடுத்த உலகக் கோப் பையை வெல்லும் திறன் எங் களிடம் உள்ளது. தற்போது அணியில் இருக்கும் வீரர்களு டனும் வரவிருக்கும் வீரர்களு டனும் கிரிக்கெட் நிர்வாகிகள் பொறுமை காக்க வேண்டும் எனவும் மலிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இளம் வீரர்கள் தங்களால் முடியும் என்று நம்ப வேண்டும். அவர்கள் அர்ப்பணிப்புடன் இரு க்க வேண்டும், அவர்கள் நடு த்தரத்திற்குச் செல்லும்போது தங்களைத் தாங்களே தீர்மா னிக்கக் கூடிய அளவிற்கு வளர வேண்டும் என்று மலிங்க கூறினார். (க)

அகமதுவைத் தூக்கி எறியுங்கள் பாகிஸ்தான் முன்னாள் வீரர் அக்தர்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி யின் முன்னாள் வீரர் ஷோயப் அக்தர், தற்போதைய அணித் தலைவர் சர்பராஸ் அகமதுவை கடுமையாக விமர்சித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடந்த உல கக்கோப்பை கிரிக்கெட் தொட ரில் பாகிஸ்தான் அணி லீக் சுற்றுடன் வெளியேறியது. அத்துடன் அந்த அணியின் தலைவரின் செயற் பாடுகள் கடுமையாக விமர்சிக் கப்பட்டன.

குறிப்பாக, பாகிஸ்தான் ரசிகர் களே அணித்தலைவர் சர்பராஸ் அகமதுவை சமூக வலைத்தளங்க ளில் விளாசி வருகின்றனர். இந்நிலையில், பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் ஷோயப் அக்த ரும் அவரை சரமாரியாக விமர் சித்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறுகையில், 'சர்பராஸை அவரது பட்டிங் மற்றும் விக்கெட் கீப்பிங்குக்காக மட்டுமே அணி யில் வைத்துக் கொள்ள வேண் டும். சர்பராஸ் அகமதுவை அணித் தலைவராக தொடர அனுமதிக்கக் கூடாது.

அவர் எந்த ஒருநாள், இரு பது-20, டெஸ்ட் என எந்த கிரிக் கெட் போட்டியிலும் அணித் தலை வராக இருக்கக் கூடாது' என தெரிவித்துள்ளார். முன்னதாக,

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியை சீரமைக்க உள்ளதாக பிரதமர் இம்ரான்கான் அமெரிக்காவில் ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

மேலும், உலகக்கோப்பை தொடரில் இந்திய அணிக்கு எதிரான போட்டியில், இம்ரான் கானின் அறிவுரையைக் கேட் காமல் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சர்பராஸ் அகமது பந்துவீச்சை தெரிவு செய்தார். அந்தப் போட்டியில் பாகிஸ்தான் தோல்வியை தழுவியது.

எனவே, அக்தரின் தற் போதைய பேச்சையும் வைத்து பார்க்கும்போது சர்பராஸ் அகமது அணித்தலைவர் பதவியில் இருந்து தூக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. (க)

வலம்புரி SPORTS

தலைமைத்துவ பண்பு டோனியிடம் உண்டு யுவராஜ் சிங்கின் தந்தை புகழாரம்

டோனியை எப்பொழுதுமே கடுமையாக விமர்சனம் செய்து வரும் யுவராஜ் சிங்கின் தந்தை இந்த முறை அதற்கு மாறாக புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், யுவராஜ் சிங்கின் தந்தையுமான யோக்ராஜ் சிங், அடிக்கடி டோனியை கடுமையாக சாடி வருவார்.

தன்னுடைய மகனின் வாழ்க்கையை அழித்ததே டோனி தான் என விமர்சனம் செய்து தலைப்பு செய்திகளில் இடம்பிடித்தார்.

அண்மையில் கூட நடந்து முடிந்த 2019 ஆம் ஆண்டு உலகக்கோப்பை தொடரில் நியூ சிலாந்து அணியிடம் தோல்வி யடைந்து, இந்திய அணி வெளி யேறியதற்கு டோனி தான் கார ணம் என குற்றம் சுமத்தியி ருந்தார்.

இந்த முறை அதற்கு அப்படியே மாற்றாக முதன் முறையாக டோனிக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்து

கொண்டு பேசிய அவர், இந்திய அணியின் தோல்விக்கு நான் ஒருபோதும் டோனியை குற்றம் சாட்டியது இல்லை. டோனி ஒரு புகழ்பெற்ற வீரர். நானும் அவ ருடைய ரசிகர்களில் ஒருவர்.

அழுத்தமான சூழ்நிலைக ளில் நல்ல முடிவுகளை எடுக் கக்கூடியவர். களத்தில் அவரது தலைமைத்துவப் பண்புகள் இந் திய அணிக்கு பயனுள்ளதாகவே இருந்துள்ளது. அவர் நீண்ட காலமாக தேசத்திற்கு சேவை செய்து வருகிறார் என்பதில் சந்தேகமில்லை எனக் கூறியு ள்ளார். (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

வெட்டுப்புள்ளி...

பெறுபேறுகளுக்கு அமைய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் வெட்டுப்புள்ளியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

www.selection.ugc.ac.lk என்ற இணையத்தளத்திற்குள் பிரவேசிப்பதனூடாக தாம் தெரிவாகியுள்ள பாடநெறி மற்றும் பல்கலைக்கழகம் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இம்முறை 30,830 பேர் பல்கலைக்கழக கற்கைநெறிக்காக தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இது கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், மேலதிகமாக 645 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (3)

மின்னல் தாக்கி...

என்பன மின்னல் தாக்கி தீப் பற்றி எரிந்து நாசமாகின.

டொல்பின் வான் முற்றாக எரிந்து நாசமாகியதுடன் பாரவூர்தி முன்பக்கம் எரிந்து சேதமடைந்தது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றது.

ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியில் வசிக்கும் சுதன் என்பவருடைய வீட்டிலேயே இந்த இடர் இடம்பெற்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பின் இரவு மின்னல், இடியுடன் மழை பெய்தது. இதன் போதே இந்த இடர் இடம்பெற்றுள்ளது. (3)

தெரிவுக்குழுவில்..

வழங்குவதால் குறித்த தரப்பினருக்காக நீதி மன்றத்தில் முன்னிலையாவதில் சிக்கலான நிலைமை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனால் தெரிவுக்குழு முன்னிலையில் சட்டமா அதிபர் என்ற ரீதியில் தன்னால் சாட்சி வழக்குவதற்கு இணக்கம் தெரிவிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபரின் குறித்த கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்காக தெரிவுக்குழு 15 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

மீண்டும் பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றுகூடிய சந்தர்ப்பத்தில், இதற்கு முன்னர் சாட்சியமளிக்க வருகை தந்தவர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தை குறிவைத்து மேற் கொண்ட கருத்துக்கள் தொடர்பில் மாத்திரம் விசாரணை செய்ய எதிர்பார்ப்பதாக எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அதற்கு பதிலளித்த சட்டமா அதிபர், அவை தொடர்பில் சாட்சியமளிக்க சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் இருவரை முன்னிலைப்படுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

அதற்கு தெரிவுக்குழுவின் அனுமதி கிடைத்ததை அடுத்து சட்டமா அதிபர் அவ்விடத்தில் இருந்து வெளியேறி சென்றுள்ளார்.

பின்னர் சாட்சி வழங்குவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிஸ்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி அப்துல் மாலிஸ் அஸீஸ் ஆகியோர் தெரிவுக்குழு முன்னிலையில் ஆஜராகி இருந்தனர். (3)

அடுத்த ஜனாதி...

வாரென அமைச்சர் மாங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"1994ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அத்தனை அரசாங்கங்களும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம் என்ற வாக்குறுதியை வழங்கியே ஆட்சிக்கு வந்தன.

மகிந்த ராஜபக்ஷவும் 2005ஆம் ஆண்டு இதே வாக்குறுதியை வழங்கியே ஆட்சிக்கு வந்தார். ஆனால், அதிகாரத்தைக் குறைக்காமல் 2010ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி, 18ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக அதிகாரத்தை மேலும் கூட்டியதே கடந்த அரசாங்கத்தின் செயற்பாடாக இருக்கிறது.

எமது அரசாங்கம் மட்டும்தான், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைத்துள்ளோம். எனினும், இந்த முறைமையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்பதில்தான் நான் உறுதியாக இருக்கிறேன்.

எனவே, எமது அடுத்த ஜனாதிபதி இந்த செயற்பாட்டை மேற்கொள்வார் என்றே நாம் நம்புகிறோம். சுதந்திரத்திற்கு பிறகு வந்த எந்தவொரு தலைவரும் இலங்கையின் பிரச்சினைக்கானத் தீர்வை முன்வைக்க முன்வரவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ உள்ளிட்டவர்கள், இந்த நாட்டில் மீக்கள் ஜக்கியமாக வாழ வேண்டுமெனில் அதிகாரத்தைப் பகிர வேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் இருந்தார்கள்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3)

வரும் செவ்வாய்...

கிழமை வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு சிறப்பு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவுறுத்தலை சகல பாடசாலை அதிபர்களுக்கும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் வழங்கியுள்ளார்.

இந்தச் சிறப்பு விடுமுறைக்கான பதில் பாடசாலை நடத்தப்பட வேண்டும். பதில் பாடசாலைக்கான நாளாக சனிக்கிழமை ஒன்றைத் தீர்மானித்து நடத்துவதற்கு சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

இலங்கையில்...

அவர், "இலங்கையில் மேலும் ஜனநாயகத்தை முன்னேற்ற வேண்டுமெனில், அது மக்களது ஜக்கியத்தின் ஊடாகவே சாத்தியப்படும் என்று குறிப்பிட்டார்.

எனினும், இலங்கை தனது கடப்பாடுகளை நிறைவேற்ற சமூகங்களில் காணப்படும் பிரிவினைகள் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும் கிளைமென்ட் நைலட் சோலி வூல் தெரிவித்தார்.

மக்களின் அபிலாசைகளையும் சட்டத்தின் ஆட்சியையும் ஜனநாயகத்தையும் அரசியல் தலைவர்கள் நிராகரிக்கக் கூடாதென்பது மிக முக்கியமானது.

போராடிப் பெற்ற ஜனநாயக உரிமைகள் தொடர்பான முன்னேற்றத்தைக் குறைத்து மதிப்பிடுதல் போன்ற விடயங்களை எதிர் வரும் தேர்தல்களின்போது அரசியல் தலைவர்கள் மேற்கொள்ளக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

காணாமல் ஆக்கப்படுதல், காணி உரிமைகள், வாழ்வாதாரம், வளங்களையும் அபிவிருத்தித் திட்டங்களையும் அணுகுதல் என் பவை தொடர்பாக பாரபட்சமான முறையில் இச் சட்டங்கள் பிரயோகிக்கப்படுவது கவனத்தை ஈர்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏப்ரல் மாதம் இடம்பெற்ற தாக்குதல்கள் மற்றும் கடந்த ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற அரசியல் மாற்றம் என்பவற்றோடு, தற்போது நீடிக்கப்பட்டுள்ள அவசரகாலச் சட்டமும் மக்களுக்கு அழுத்தத்தை பிரயோகிக்கும் வகையிலேயே காணப்படுவதாகவும் ஐ:நா. விசேட நிபுணர் தெரிவித்தார்.

அத்தோடு, யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் கூட, பாதுகாப்புத் துறையில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படாதமையானது, சிவில் சமூக இயக்கத்தில் தடையை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் இதன்போது கூறினார்.

அதேநேரம், வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் கொழும்பு உள்ளிட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து பல்வேறு விடயங்களை ஆராய்ந்துள்ள இவர், இதுதொடர்பான தனது விசேட அறிக்கையினையும் பரிந்துரைகளையும் 2020ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் அமர்வில் சமர்ப்பிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

ஜப்பான் பாது...

இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன, இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அக்கிரா சுகியாமா, ஜப்பான் பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் பரிமாற்றல் பணிப்பாளர் மசகஷி டக்காஷி, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் உதவியாளர் ஹிரோஷி கோகூபோ ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். (3)

கொழும்பில்...

துள்ளனர்.

நாவலப்பிட்டி, கொரக்கலய பிரதேசத்தை சேர்ந்த 22 வயதான இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபர், அம்பாந்தோட்டையில் சஹ்ரான ஹாசிம் நடத்திய சமய விரிவுரை களில் கலந்துக்கொண்டவர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர், கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (3)

தமிழ்த் தேசியக்...

வழங்குவதற்கு தீர்மானித்தேன். அதற்கு வெளிநாட்டு பிரதிநிதிகளே 13 பிளஸ் என பெயரிட்டனர்.

எனினும் அந்த தேர்தல் முறைமாற்றத்தை கொண்டு வந்தவர்களே அதற்கு எதிர்ப்பினை வெளியிடுகின்றனர். ஆகவே அதற்கு நாம் இணக்கம் தெரிவிக்க முடியாது.

2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிரதமர் பாராளுமன்றில் சமர்ப்பித்த அறிக்கை எம்.ஏ.சுமந்திரன் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் சிலரால் உருவாக்கப்பட்டது என ஒரு பேச்சு காணப்படுகின்றது.

இரண்டரை வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பு குறித்த அறிக்கை தம்முடையது அல்லவென பிரதமர் குறிப்பிட்டார்.

ஆகவே இறுதியில் பார்க்கையில் அரசாங்கமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏமாற்று வேலையை செய்திருக்கின்றது என்றே நான் நினைக்கின்றேன். கடந்த நான்கு வருடங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடித்த நாடகமும் இல்லை, அடித்த தாளமும் இல்லை.

சுமந்திரன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வரைபுகளை தனிநாடு என்ற விடயத்தை உள்ளடக்கியே உருவாக்குவார். அவர்களது நோக்கம் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு இளைஞர்கள் தம்முடைய பிரச்சினைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களிடம் தெரிவிக்கையில் முதலில் விடுதலையை பெற்றுக் கொண்டு பின்னர் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்போம் எனத் தெரிவித்துள்ளதாக செய்திகள் அறியக் கிடைக்கின்றன.

இதற்கமைவே அரசாங்கத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்திருந்தது. எனினும் அவர் விடுதலையும் பெறவில்லை. மக்களுக்கு எதுவும் கிடைக்கவும் இல்லை.

தமிழ் மக்கள் வடக்கு கிழக்கை தனியாக நிர்வகிப்பதே அவர்கள் விடுதலை என குறிப்பிடுகின்றனர்.

நான் 2014ஆம் ஆண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுத்தேன். பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. எனினும் பின்னர் அவர்கள் பேச்சுவார்த்தையை நிறுத்திக் கொண்டனர்.

19ஆவது திருத்தச் சட்டத்தின் குழு கூட்டத்தின் போது எவருக்கும் தெரியாமல் வரைபில் காணப்பட்ட வார்த்தைகளை அகற்றினர். அதனால் ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையின் காரணமாக எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் யாப்பு திருத்தத்திற்கு இந்த அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க இயலாது.

அதேபோல் அரசாங்கத்தின் இறுதி காலத்தில் யாப்பு திருத்தம் தொடர்பில் பேசி பிரயோசனம் இல்லை. ஆகவே மக்களின் வாக்குகளினால் புதிதாக உருவாகும் அரசாங்கமே அந்த விடயத்தை செயற்படுத்த வேண்டும்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலின்போது யாப்புத் திருத்தம் தொடர்பில் நாம் முன்மொழிவுகளை வைக்கவுள்ளோம். புதிய அரசாங்கத்தின் ஊடாக யாப்பு ஒன்றை உருவாக்குவதற்கு அனைத்துக் கட்சிகளினதும் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள எதிர் பார்க்கின்றோம்.

மக்கள் வாக்கெடுப்பின்றி யாப்பினை மாற்றியமைப்போம் என மக்களை ஏமாற்ற மாட்டோம். புதிய யாப்புத் தொடர்பில் மக்கள் வாக்கெடுப்பை நடத்துவோம் என குறிப்பிட்டுள்ளார். (3)

வடக்கு, கிழக்கு...

இன்றும் ஏற்றுக் கொள்கின்றேன். நான் இதனூடாக பாராளுமன்றில் இரண்டாவது சபை ஒன்றை ஏற்படுத்தி பிரதேச சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவதற்கு தீர்மானித்தேன். அதற்கு வெளிநாட்டு பிரதிநிதிகளே 13 பிளஸ் என பெயரிட்டனர்.

நான் 13 பிளஸ் தொடர்பில் பேசியது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த அறிக்கையைப்போல் நாட்டை ஒன்பதாக பிரிக்கும் செயற்பாடு அல்ல. பிரதமர் மன்றில் சமர்ப்பித்த அறிக்கையில் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கும், தேர்தல் முறையில் மாற்றங்களை செய்வதற்கும் சில விடயங்கள் காணப்பட்டது உண்மைதான்.

எனினும் அந்த தேர்தல் முறை மாற்றத்தை கொண்டு வந்தவர்களே அதற்கு எதிர்ப்பினை வெளியிடுகின்றனர். ஆகவே அதற்கு நாம் இணக்கம் தெரிவிக்க முடியாது என்றார். (3)

யாழில் மகா...

எஸ்.சுகிர்தன் கூறியுள்ளார்.

விகாரை அமைப்பு தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதனிடையே, தனியார் காணியில் மகாபோதி அமைக்கப்படுவதை எதிர்த்து பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஊடாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்" என்றார். (3)

புதிய அரசியலமைப்பு நாட்டினை பிளவுபடுத்தாது

இதனை சிங்கள மக்கள் ஏற்கவேண்டும் – ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பினூடாக இந்த நாடு பிளவுபடும் என்ற சந்தேகத்தில் இருந்து சிங்கள மக்கள் மீளவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதிய அரசியலமைப்பு தொடர்பில் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போது தயாரிக்கப்பட்டிருக்கும் அரசியலமைப்பு வரைபில் பல நல்ல விடயங்கள் இருக்கின்றன. செனட் சபை என்றும் மேல் சபை என்றும் புதிய கட்டமைப்புக்கள் இருக்கின்றன. அதிகார பரவலாக்கம் மூலமாகவே ஒற்றுமைமிக்க சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். அரசியலமைப்பில் ஏக்கிய ராஜ்ஜி என்ற சொல்லை சிங்கள மக்கள் தவறாக அர்த்தம் கொண்டிருக்கின்றனர். ஏக்கிய என்பது ஒருமித்த நாடு என்ற அர்த்தமாகும். அதில் எந்த பிளவும் இல்லை. அதனால் புதிய அரசியலமைப்பினூடாக நாடு பிளவுபடும் என்ற சந்தேகத்தில் இருந்து சிங்கள மக்கள் விடுபடவேண்டும்.

அத்துடன் புதிய அரசியலமைப்பினூடாக சிறுபான்மை மக்களின் பிரச்சினை மாத்திரமல்ல சிங்கள மக்களின் பிரச்சினையும் தீர்க்கப்படவேண்டும். அதேபோன்று தேர்தல் முறைமையில் இருக்கும் பிரச்சினைகளும் தீர்க்கப்படவேண்டும். உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெற்ற முறையில் அடுத்த வரவு செலவு திட்டத்தை வெற்றிகொள்ள முடியாத நிலை பல தவிசாளர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. அதேபோன்று மாகாணசபை தேர்தலை நடத்துவதற்கும் இன்று பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. அதனால் பழைய முறையிலாவது மாகாண சபை தேர்தலை ஜனாதிபதி தேர்தலுக்கு முன் நடத்த வேண்டும் என்றார். (3)

மாணவர் கல்விக்கு இடையூறு ஏற்படுத்தும்

ஒலிபெருக்கி பாவனையை கட்டுப்படுத்த அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

பரீட்சைக் காலத்தை கருத்திற் கொண்டு ஒலிபெருக்கிப் பாவனையை கட்டுப்படுத்துமாறு வைபவங்கள் மற்றும் விழாக்களை ஒழுங்குபடுத்துவோரிடம் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், இடையூறுகள் ஏற்படுத்தும் வகையில் இடம்பெறும் ஒலிபெருக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக உரிய ஒழுங்கு விதிகளையும் சட்ட ஏற்பாடுகளையும் அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபருக்கும், வடக்கின் ஐந்து மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களுக்கும், மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் இவ்வாறு ஆளுநர் பணித்துள்ளார். (3)

அரசியலமைப்பில் மாற்றம் செய்ய அரசாங்கத்திற்கு உரிமை இல்லை

மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியலமைப்புச் சட்டத்தில் மீண்டும் மாற்றம் செய்ய அரசாங்கத்திற்கு எந்த உரிமையுமில்லை என்றும் அடுத்த ஆட்சிக்கு வரும் அரசாங்கத்தினாலேயே அதனை செய்ய முடியும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் இணையும். பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத 10 அரசியல் கட்சிகளுடன் நேற்று புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார். மேலும் அவர்,

நாட்டில் தற்போதுள்ள அரசியல் நிலைமை தொடர்பாக நாம் புதிதாக பேச எதுவுமில்லை.

சிங்களவர், தமிழர், முஸ்லிம் உட்பட அனைத்து இனத்தவருக்கும், மதத்தவருக்கும் தற்போது நாட்டில் வாழும் உரிமை தொடர்பாக சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எமக்கு இந்த நிலைமை புரிகின்றது.

மதத்தை வழிபடும் உரிமை இல்லாமல் போயுள்ளது. விகாரை, கோயில், தேவாலயம், பள்ளிவாசல்களுக்கு சுதந்திரமாக சென்று வழிபட முடியவில்லை. அனைவரும் பயத்திலும், அச்சத்திலும் வாழ நேரிட்டுள்ளது.

30 ஆண்டுகளாக நாட்டில் நடந்த மோசமான பயங்கரவாத போர் காலத்தில் கூட மக்கள் இந்த அளவுக்கு அச்சத்துடனும், சந்தேகத்துடனும் வாழவில்லை.

தற்போது வாழும் மக்களுக்காக அல்ல, நாளை பிறக்கும் எதிர்கால சந்ததிக்காக இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டியது அனைவரதும் கடமை. இந்த அரசாங்கம் நாட்டை பிரித்து, நாட்டை அழித்து முடிக்கும் முன்னர் நாம் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (3)

49000 ரூபாவுக்கு
சிசிரிவி கமரா
மிகத்துல்லியமான 4 கமராக்கள் இணைப்புபொருட்கள் கொண்ட பொதி
49000/= மட்டுமே.
(பொருத்துதல் கட்டணம் உட்பட)
GUNA BEST PC CCTV EXPERT
522 மானிப்பாய் வீதி ஒட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்
(C-7120) 077 9086737

வேலையாட்கள் தேவை
1. மின் இணைப்பு, பிளம்பிங் வேலையாட்கள், உதவியாளர்கள்.
2. கட்டிட மேற்பார்வையாளர்
3. கூலியாட்கள்.
(9720) 076 554 1472

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
(9720) தொடர்புக்கு: றாஜ் - 077 679 6623

இரண்டு மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள்
077 9086737
GUNA BEST PC COMPUTER REPAIR
522 மானிப்பாய் வீதி ஒட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்
(C-7120)

வேலைவாய்ப்பு
வவுனியாவில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு எமது கிளைகளான மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பணிபுரிவதற்கு விற்பனை அனுபவமும் சாரதி அனுமதிப்பத்திரம்உள்ளகீழ்காணும்வெற்றிடங்கள்கோரப்படுகின்றன.
தகுதியானவர்கள் உடன் விண்ணப்பிக்கவும்.
1. விற்பனை பிரதிநிதி
2. விற்பனை மேற்பார்வையாளர்
3. விற்பனை உதவியாளர்கள்
தொடர்புகளுக்கு : ஜி.எச்.ஏ.டி சில்வா கம்பனி
இல.64, பசார் வீதி, வவுனியா.
077 2960787 / 024 222 2319
(9715)

இந்திய விபூதி விற்பனைக்கு
எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg), மொத்தமாகவும் (ரூபாய் 100), சில்லறையாகவும் (ரூபாய் 110) பெற்றுக்கொள்ளலாம்.
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்)
தொடர்புகளுக்கு :021 222 2567
(C-7114)

விற்பனைக்கு
தரமான
செங்கல் விற்பனைக்கு
077 025 6640

காணி விற்பனை
யாழ்ப்பாணத்தில் இருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் கல்லுண்டாய் வைரவர் கோயிலுக்கு வடக்கு பக்கமாக 3 1/2 பரப்பு மேட்டு நிலக் காணி உறுதியுடன் விற்பனைக்கு உண்டு.
T.P : 077 971 4755

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்ளூர், வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
விசேட விலைக்குறைப்பு
CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413
(C-7113)

காணி விற்பனைக்கு
வட்டுகிழக்கு, குழிப்பன் வீதியில் 3 பரப்பு காணி உடன் விற்பனைக் குண்டு. விலைபேசித் தீர்மானிக் கலாம்.
தொடர்புகளுக்கு :
075 053 2761
(9683)

துரித தபால்கள் பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு
UK - 600/=
Germaney - 700/=
France - 700/=
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
0777 554 528
(C-7067)

வீட்டுப்பணிப் பெண் தேவை
நகரப் பகுதியில் உள்ள இருவர் கொண்ட குடும்பத்தில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப் பெண் தேவை.
தொடர்புகளுக்கு :
077 364 1547, 077 638 8389
(9714)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK – 550 /=Kg
கனடா – 950 /=Kg
ஜேர்மனி – 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg
(பிரத்தியேகமாக்கப்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெல்லியடி, கொடிகாமம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, மானிப்பாய், சாவகச்சேரி, சுன்னாகம், மருதங்கேணி, நீர்கொழும்பு

வேலையாட்கள் தேவை
கொழும்பில் பிவிசி குழாய்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற் சாலைக்கு உற்பத்தி, பொதியிடும் விநியோகிக்கும் பிரிவுகளுக்கு, உதவியாளர்கள் தேவை.
சாப்பாட்டுடன் தங்குமிடம் தரப்படும். தூர இடங்களில் இருந்து வந்து தங்கி வேலை செய்யக்கூடியவர்களுக்கு முன்னுரிமை.
தொடர்புகளுக்கு :
077 313 1936, 077 788 4721
(9703)

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L சித்தியடைந்தவர்கள் விரும்பத்தக்கது
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கொழும்பு, கேரளா, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மருதங்கேணி, புத்தளம்
● எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால பயிற்சியுடன் வேலை வாய்ப்புக்கள் உண்டு.
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -/7500/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● சம்பளம் -/15000/-
(C-7017)
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.